# சுதந்திரன்


SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 35

வள்ளுவர் ஆண்டு 2005, சித்திரை 8உ (21-4-74) ஞாயிறு ஏப்ரல் 21 ரபி: அவ் 27 - புத்தகம் 27 இதழ்-34


## தமிழ் விஞ்ஞான மாணவர்களுக்கு கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தில்

# கதவடைப்பு!



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4வது உலகத் தமிழ் மாநாட்டின் போது பொலிசார் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டித்தும்— சிறையிலுள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யுமாறு கோரியும்— ஈழத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டுவரும் ஏனைய அநீதிகளை கண்டித்தும் இலண்டன் வாழ் தமிழர்கள் அண்மையில் ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் நடத்திய காட்சிகள் இவை.

## ஏனைய வளாகங்களிலும் தமிழ் மாணவருக்கு அநீதி!

கொழும்பு பல்கலைக்கழக வளாகத்திலுள்ள விஞ்ஞான பீடத்தில் தமிழ் மாணவர்களுக்கு கதவடைப்பு நடைபெறுகிறது. உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம் ஆகிய இரு துறைகளுக்கும் ஒரு தமிழ் மாணவனாவது தெரிவு செய்யப்படவில்லை.

இதேவேளையில் ஏனைய பல்கலைக்கழக வளாகங்களின் பல்வேறு துறைகளுக்கும் அனுமதிக்கப்பட்டிருக்கும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது—தரப்படுத்தல் திட்டத்தின் கீழும், இன அடிப்படையிலும் தமிழ் மாணவர்கள் முற்று முழுதாக புறக்கணிக்கப்பட்டு ஒதுக்கப்பட்டுள்ளார்கள் என்ற உண்மை தெரியவருகிறது.

கொழும்பு, பேராதனை, கட்டுபெத்தை ஆகிய மூன்று பல்கலைக்கழகங்களின் விஞ்ஞான, மருத்துவ, பொறியியல் பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள மொத்த மாணவர் தொகையையும், அதில் தமிழ் மாணவர் தொகை எவ்வளவு என்ப

(4-ம் பக்கம் பார்க்க)

### 1974 — பல்கலைக் கழக அனுமதி விபரம்

| துறை | வளாகம் | மொத்த தொகை | சிங்களவர் | தமிழர் |
|---|---|---|---|---|
| பொறி இயல் | பேராதனை | 146 | 113 | 33 |
| பொறி இயல் | கட்டுபெத்த | 129 | 111 | 18 |
| மருத்துவம் | கொழும்பு | 163 | 127 | 36 |
| மருத்துவம் | பேராதனை | 90 | 57 | 33 |
| பல் மருத்துவம் | பேராதனை | 48 | 34 | 14 |
| பௌதிக விஞ்ஞானம் | பேராதனை | 140 | 98 | 42 |
| பௌதிக விஞ்ஞானம் | கொழும்பு | 116 | 116 | 0 |
| பௌதிக விஞ்ஞானம் | கட்டுபெத்த | 114 | 27 | 87 |
| வேளாண்மை | கொழும்பு | 98 | 83 | 15 |
| உயிரியல் | பேராதனை | 58 | 39 | 19 |
| உயிரியல் | கொழும்பு | 61 | 61 | 0 |
| கட்டடம் | கொழும்பு | 38 | 29 | 9 |
| மொத்தம் | — | 1201 | 895 | 306 |

★ முக்கிய குறிப்பு: கட்டுபெத்த வளாகத்தில் பௌதிக விஞ்ஞானப் பிரிவு இவ்வாண்டே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இங்கு போதிய விஞ்ஞான ஆய்வுகூட வசதிகளும் உயர்ந்த கல்வித் தரமும் கிடையா. இதனால் இங்கு 87 தமிழ் மாணவர்கள் (சிங்கள மாணவரை விட அதிக அளவில்) அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# போதனமொழி யுரிமையைக் கூட ஒப்புக் கொள்ள மறுக்கும் 'தேசியக்' கட்சிகளால் தமிழர்களுக்கு நன்மையுண்டா?

மன்னாரில் நடைபெற்ற இடைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றதை, அக்கட்சி தேசியக் கட்சியாக இருப்பதால் அதைத் தாம் வரவேற்பதாக யாழ்ப்பாணத்துக்கு முதல் முறையாகவந்திருந்த காணி அமைச்சர் குறிப்பிட்டார். மேலும் ஒரு படி முன்னேறி தபாலமைச்சர் அவர்கள், தேசியக் கட்சிகளை ஆதரிக்க வேண்டும் என்ற அடிப்படையில், தானும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மேற்கொண்ட பிரச்சாரத்தினால் தான் மன்னாரில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றது எனப் பெருமைப் படுகிறார்.

### மன்னாரில் ஆட்சியினர் போட்டியிடப் பின் வாங்கியது ஏன்?

விவசாய உற்பத்தியாலும் அவைகளில் கொண்ட ஈடுபாட்டாலும் போட்டியிட முடியவில்லை என தபால் அமைச்சர் தெரிவித்தார். 1973ம் ஆண்டு ஆரம்பமாகிய விவசாய ஆண்டும் ஐந்து ஆண்டுத் திட்டமும் நாம் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். நடைபெற்ற சகல இடைத்தேர்தல்களிலும் போட்டியிட்டு ஒரு தொகுதியில் மட்டுமே வெற்றிபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரி முன்னணியும் மன்னார் மக்களை மட்டும் மறந்தது ஏனோ? தமிழ்ப் பிரதேசமென்றபடியாலா? அல்லது தேவையற்ற தொகுதி என்பதாலா? அல்லது கட்டுப்பணமும் கிடைக்காது என்பதாலா? அல்லது தமிழர் கூட்டணியுடன் போட்டியைத் தவிர்ப்பதற்காகவா? ஆராய்ந்து பார்க்கும்போது இக்காரணங்களிலும் பார்க்க தமிழர் கூட்டணிக்கு எதிராக நேரடிப் போட்டியை உருவாக்கவே இவ்வாறு செய்திருக்கிறார்கள்.

### இலங்கையில் தேசியக்கட்சி உண்டா?

தேசியக் கட்சி என்றால் அது தேசம் முழுவதும் பரந்து இருக்கவேண்டும். தேச மக்கள் அனைவருக்கும் உழைக்கவேண்டும். சகல இன மக்களின் மொழி, கலை, கலாச்சாரம், உரிமை பொருளாதாரம் இவற்றிற்கு உத்தரவாதம் கொடுக்கவேண்டும். அப்படியாக எந்தக் கட்சியையும் காணோம்.

1956ம் ஆண்டுடன் ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் குறுகிய இன, மொழி, வாதக்கொள்கையை ஏற்றுக் கொண்டன. இன்றும் இன, மொழி மதவாதக் கொள்கைகளையே முன்நிறுத்தித் தங்கள் கட்சிகளை வளர்க்கிறார்கள்.

ஓரளவு சோஷலிசமும், பொருளாதாரப் பிரச்சினையும் பேசி இன, மத, மொழி வேறுபாடுகளைக் களைந்து வளர்ந்திருந்த சமசமாஜக் கட்சியும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும்கூட இன்று தங்கள் கட்சியை இன, மொழி மதவாதக்கட்சியாக 1964 முதல் (இடதுசாரி ஐக்கிய முன்னணி என்ற பெயரில்) மாற்றிக் கொண்டுள்ளன.

தவிரவும் அமைச்சர் குறிப்பிடும் ஐக்கிய தேசியக்கட்சி கடந்த பொதுத் தேர்தலில் வட மாகாணத்தில் மன்னாரில் மட்டுமே போட்டியிட்டது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் வடமாகாணத்தில் ஒரு தொகுதியைக்கூட வென்றெடுக்க முடியாத நிலை இருந்தது. இது மக்களின் மனநிலை என்பதையும் அரசியல் நிலை என்பதையும் அமைச்சர் ஏற்றுக்கொண்டேயாகவேண்டும்.

### வடமாகாணக் கிளைகள்

ஆட்சிக்கு வருகின்ற ஒரு கட்சியினால் தனிப்பட்ட முறையில் ஆதாயம் பெறுவதற்கு சிலர் கட்சி மாறுவதும் இன்று சகசமாகிவிட்டது. இம்முறை மட்டுமல்ல, ஒவ்வொரு அரசியல் மாற்றத்திலும் இதைத் தமிழ் மக்

**முத்து—சுப்பிரமணியம்**

கள் நன்கு அறிந்திருக்கிறார்கள், மொழிப் பிரச்சினை தீரவில்லையென்பதையும் தமிழ் மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டுமென்பதையும் இத் தேசிய கட்சிகளின் கிளைகளும் அக்கட்சிகளின் அமைப்பாளர்களும், கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் விவாதிப்பதை நாம் அறவே காணமுடியாதிருக்கிறது. (ஏனெனில் அப்படி விவாதிப்பது அக்கட்சிகளின் மொழிக் கொள்கைக்கு முரண்பாடாகும்)

ஆனால் அடிக்கடி பிரதம மந்திரியோடு பேசுகிறார்கள், தூதுசெல்கிறார்கள், அமைச்சர்களை வரவேற்கிறார்கள், பலன்—இன்றுவரை ஆலோசிப்போம்கட்சியின்என்று நிர்வாகபீடத்தினர் சொன்னதாகத்தெரியவில்லை. எனவே தங்களை வளர்க்க கிளைகள் அமைக்கப்படுகிறதே தவிர மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வளர்க்கப்படவில்லை.

### போதனமொழியில் தேசியக் கட்சிகள்

தாய்மொழியிலேயே குழந்தைகளுக்கு கல்வியூட்டப்பட வேண்டுமென்பது கல்வியறிந்த நிபுணர்கள் கருத்தாகும். இக்கொள்கை உலகம் முழுவதும் செயல்படுகிறது. இலங்கையில் சிங்கள மக்கள் சிங்களத்தைப் போதனமொழியாகக் கொண்டிருக்க தமிழ் குழந்தைகளுக்கு மட்டும் பெற்றோர் விரும்பிய மொழி ஏன்? கேவலம், குழந்தைகளின் கல்வியிலாவது இக்கட்சிகள் நியாயமாக நடந்துள்ளனவா? சிங்கள மக்களுக்குச் சிங்களம், தமிழ்மக்களுக்குத் தமிழ் என்றும், பௌத்தர்களுக்குப் பௌத்த மதம், இந்துக்களுக்கு இந்துமதம் என்னும் மொழி மதச் சார்பற்ற பொதுவான நீதிகளைக் கைப்பிடிக்கமுடியாத இக்கட்சிகளை அமைச்சர்கள் விரும்பில் 'தேசியக்' கட்சிகள் என அழைக்கட்டும். ஆனால் அக்கட்சிகளும் பிரதேசக் கட்சிகளே. தங்கள், மொழியை, மதத்தை, ஆட்சி உரிமையைக் காப்பாற்ற சிங்கள மக்கள் அக்கட்சியை வளர்க்கிறார்கள், வைத்திருக்கிறார்கள்.

### முற்போக்குக் காங்கிரஸ் ஏன்?

மன்னாரில் தேசியக் கட்சி என்றால், நல்லூரில் முற்போக்குக் காங்கிரஸ் ஏன்? நல்லூரிலும், வட்டுக்கோட்டையிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கிளைகள் இல்லையா? அல்லது ஐக்கிய இடதுசாரி முன்னணி இல்லையா? இக்கிளைகளில் திருவாளர்கள் அருளம்பலமும், தியாகராசாவும் சேராமல் இருப்பது ஏன்? தமக்கென ஒரு கட்சியைத் தாமே அமைத்து அதை வழி நடத்துகின்ற அரசாங்க ஆதரவாளர்களான இப்பிரதிநிதிகளை அமைச்சர் தேசியக் கட்சிக்கு அழைத்துச் சென்றால் என்ன? அமைச்சர் அழைத்தும் இன்னமும் தேசியக்கட்சியில் அவர்கள் சேரவில்லை. ஏனெனில் அக்கட்சியில் மொழிப் பிரச்சினை தீர்ந்த ஒன்றாயிற்று. தமிழர்கள் பிரச்சினைகள் தீரவில்லை என்பதை அருளம்பலமும் தியாகராசாவும் ஏற்றுக்கொள்வதால் தான் இன்று முற்போக்குக் காங்கிரஸ் உருவாகியது.

### சிங்களக் கட்சிகளும் தமிழரும்

சம அந்தஸ்து தமிழுக்குக் கொடுப்போம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்த சர் யோன் கொத்தலாவலை யாழ்ப்பாணத்தில் வாக்குறுதி தரும் போது தெற்கில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனிச்சிங்களம் என்றது. தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்க விரும்பிய ஐக்கிய தேசியக் கட்சியும் தனி சிங்களம் என்று களனி மாநாட்டில் தீர்மானித்தது. தேசியக் கட்சிகளாக அன்றிருந்த இக்கட்சிகளிலிருந்து அக்கட்சிகளின் தமிழ் உறுப்பினர்கள் அழுதுகொண்டு வெளியேறினார்கள். அன்றைய தபால் மந்திரி நடேசன் அவர்களின் சொற்பொழிவையும் சிறிலங்காவிலிருந்து வெளியேறியவர்களின் மனப்போக்கையும் இன்றைய தபால் அமைச்சர் படித்துப் பார்ப்பாரானால் தேசியக் கட்சிகளின் திமிர்ப் போக்கைப் புரிந்துகொள்ள முடியும்.

### தமிழரசுக் கட்சி சாதித்தவை

தமிழர்களுக்கு தமக்கென ஒரு ஸ்தாபனம் வேண்டுமென்பதை உணர்ந்து தமிழர்களின் நலனுக்கு உழைக்கத் தமிழ் காங்கிரஸ் உதயமாயிற்று. தமிழர்களின் சொந்த நலன்களைக் கவனிக்கவும் அதே நேரத்தில் இலங்கையின் நலன்களைக் கவனிக்கவும் இக்கட்சி உழைத்தது. அரசியல்மாறுபாட்டாலும், காங்கிரஸ் சரியான பாதையில் தமிழ் மக்களுக்காக உழைக்கவில்லை என்று கண்டதனாலும் எமது இன்றைய தலைவர்களான தந்தைசெல்வநாயகமும், மறைந்த தலைவன் டாக்டர் நாகநாதனும், அமரர் வன்னியசிங்கமும் தமிழரசுக்கட்சியை உருவாக்கினர்.

ஆட்சியிலிருந்த பண்டாரநாயக்கா அரசாங்கத்துக்கு எதிராக சத்தியாக்கிரகப் போராட்டத்துக்குத் திகதியும் குறித்தனர். தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படும் நேரமெல்லாம்நேரடி நடவடிக்கையில் ஈடுபட்டனர். வெற்றி கிடைக்காமலில்லை. பண்டா - செல்வா ஒப்பந்தமே உருவாகியது. பிரதேச சுய ஆட்சி தமிழருக்குத் தருவதாக ஒப்பந்தமே எழுதப்பட்டது.

தேசியக் கட்சி எனத் தமிழமைச்சரால் வர்ணிக்கப்படும் ஐக்கிய தேசியக்கட்சி குறுகிய இனமொழிவாதத்தால் கண்டி யாத்திரையைத் தொடங்கி ஈற்றில் பௌத்த பிக்குகளின் மிலேச்சத்தனமான போக்கால் அவ்வொப்பந்தம் கிழிக்கப்பட்டது.

இன்று அனுராவின் அரசியலில் அகப்பட்டிருக்கும் இவ்வொப்பந்தம் தமிழரசுக்கும் சிறிலங்காவுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தமென்பதை தபாலமைச்சர் ஏற்றுக்கொள்வார். நாடு இரண்டாகப் போகிறது. தமிழர்களுக்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி நாடு கொடுத்துவிட்டது என்று வகுப்புவாதமும், சுவரொட்டிகளும் அச்சடித்துக் கொடுத்துததேர்தல் பிரசாரம் செய்த ஐக்கிய தேசியக் கட்சிகுறைந்தபாராளுமன்ற ஸ்தானங்களையே பிடிக்க முடிந்தது. 1960ல்சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆட்சிப் பீடத்தில் ஏற்றியவர்கள் தமிழ் மக்களே.

### பிரதேச சபைகள்

தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை ஈற்றில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கைவிட்டது. தமிழரசார் தமிழ் பிரதேசங்களில் சத்தியாக்கிரக நடவடிக்கையில் ஈடுபட்டனர். தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்படவேண்டுமென்றும், அன்னிய நாடுகளுக்குப் படை எடுப்பது போல் இராணுவ படை எடுப்பு தமிழ் பகுதிகளுக்கு ஏன் என்றும் இன்றைய நீதி அமைச்சர் ஆட்சியினரைக் கேட்டார். ஈற்றில் பிரதேச சபைகள், அமைக்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

### மாவட்ட சபைகள்

1965ல் டட்லி சேனநாயக்கா ஆட்சிக்கு வந்தபோது இலங்கையின் சகல மாகாணங்களுக்கும் மாவட்ட சபைகள் அமைக்கப்படுமென உறுதியளித்தார். அரசாங்க தீர்மானமாகவும், வெள்ளையறிக்கையாகவும் இது வந்தது. 1958ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட தமிழ் மொழி விசேட மசோதாவுக்குப் பிரமாணங்கள் கொண்டுவரப்பட்டன.

இப்பிரமாணங்களை நிறைவேற்றும் போது இதற்கு எதிராக சிறீலங்கா சுதந்திரக் கட்சி நடத்திய கதவடைப்பும், கறுப்புக்கொடியும், ஊர்வலங்களும் தமிழர்கள் மனதில் பசுமையாகவே இருக்கிறது. மாவட்ட சபைக்கெதிராக நிகழ்த்திய பிரசாரமும், பாராளுமன்றப் பஷ்கிகரிப்பும் தமிழர்கள் மனதில் மாறாத வடுவை ஏற்படுத்தின. இவர்களது கட்சியைத்தான் 'தேசியக்' கட்சியென என அன்றில்லாத ஒருவர் இன்று அமைச்சராகிக் கூறுகிறார்.

### இன்றைய அரசு தமிழர்களுக்கு வழங்கிய உரிமைகள்

1970ல் அரசேறிய இடதுசாரி ஐக்கிய முன்னணி ஆட்சி தமிழர்களுக்கு இருந்த உரிமையையும் அறவே இல்லாமல்செய்ததுதான் தபால் அமைச்சர் சேர்ந்திருக்கும் ஆட்சியினரின் திறமையாகும்.

1966ம் ஆண்டின் தமிழ் மொழி விசேட பிரமாணங்கள் சட்டம் செல்லாத சட்டமாகஇருக்கிறது. நடைமுறைப் படுத்தப்படவில்லை.

(6-ம் பக்கம் பார்க்க)

---

## வாடா...தோழா... தமிழனாய் நீயும்


—திருமலை சுந்தா

ஓ—
என்னருமை ஈழத்தமிழ் நாடே
உனது கதறல் எனக்கு கேட்கிறது
உன் வாயினுள் குண்டு போடும் —
அதிகார அரக்கரின் ஆணவ வெறியாட்டமும் —
அடக்கி ஒடுக்கிடும் காட்டேறித்தனமும்
அத்து மீறி விட்டதை உணர்கின்றேன்.

மலையும் நிலமும் — ஆறும் குளமும்
கடலும் வளியும் நிறைந்திருந்தும்
பசியையும் பட்டினியையும் நீயேற்றே—
உன்னை அழிக்கத் துடிக்கும் கயவர்க்கு,
நீயுதவும் வள்ளல் தனத்தினை—
நினைத்திடும்போது மெய்யே சிலிர்க்கிறது.

செந்நெல் மணியும் — நன்செய் நிலமும்
குமுறிடும் கடலும் — இயற்கைத் துறையும்
உழைத்திட உறுதியும் — பேசிட மொழியும்
காக்கும் அரணாய் உன்னிடமிருந்தும் —
பேடி போல் நாடி விழுந்து...
விக்கி அழும் சோகக் குரலைக் —
கேட்டிடும்போது நெஞ்சே கொதிக்கிறது.

இனியாவது உனது—பரம்பரை...
வள்ளல் தனத்தையும்...
பேடிப் போக்கினையும்...
மறந்து விட்டு —
தேடாதிருந்த குன்றினைப் பிளந்த
தமிழரால் வந்த வீரத்திற்கு—'
உரிமையை உடைமையாக்கி,
எம்மையேயாம் ஆண்டிட
உனது மகனையே அழைக்கின்றேன்
வாடா தோழா —
தமிழனாய் நீயும்.




**உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழுகின்ற மக்கட் பிரிவினரிடையே, அவர்களை ஒன்றுபடுத்துகின்ற சக்தியாக விளங்குபவை இரண்டு. ஒன்று மதம், மற்றது மொழி.**

மத அடிப்படையில் மக்கள் ஒன்றுபட்டு—தங்கள் தங்கள் மதங்களை முன்வைத்து — 'புனித யுத்தம்' (Holy war) நடத்திய சம்பவங்களைப் பற்றி ஐரோப்பிய வரலாறுகள் பேசுகின்றன.

பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுகின்ற நாடுகளாக இருந்த போதிலும் இன, மொழி கலாசார அடிப்படையிலான தங்கள் தனித்துவத்தையும் எல்லைக் கோடுகளையும் அழித்துவிட்டு அவை ஒரே நாடாகி விடவில்லை; தனித்தனி நாடுகளாகத்தான் விளங்குகின்றன.

மத உணர்வை விட, மொழி, இன கலாசார உணர்வுகளுக்கே மக்களை இணைக்கும் சக்தி அதிகம் உண்டு.

மத ரீதியாக ஒன்றுபடுபவர்களில் முதன்மை பெற்றவர்கள் உலகத்து இஸ்லாமிய மக்களே என்று கூறுவார்கள். ஆனால் அண்மையில் விடுதலை



வடநாட்டுப் பேராசிரியர் டாக்டர் ரவீந்திரகுமார் சேத்

பெற்ற 'பங்களாதேஷ்' இஸ்லாமிய மக்கள், மதத்தை விட மொழி, இன கலாசார உணர்வுகளே உயிர்த்துடிப்புள்ளவை — உயர்ந்தவை — என்பதை ஐயத்துக்கிடமின்றி நிரூபித்து விட்டார்கள். பாகிஸ்தானுடன் மத ரீதியில் ஒன்று பட்டிருந்தும் இனமும், மொழியும் கலாசாரமுமே, மதத்தை விட உயர்ந்தவை என்பதை பங்களாதேஷைச்சேர்ந்த வங்கத்து இஸ்லாமிய மக்கள் ஐயத்துக்கிடமின்றி நிரூபித்து விட்டார்கள்.

உலகத்து இனங்களுள் ஆதிமுதலே மொழியால் இணைந்து ஒன்றுபட்டு வாழ்ந்து வருகின்ற இனம் தமிழினம் ஆகும். உலகில் தமிழன் எந்த மூலையில் வாழ்ந்தாலும்—என்ன நிலையில் வாழ்ந்தாலும் — அவனை தமிழனாக வைத்திருப்பது தமிழ் மொழி தான்!

தமிழனது கலை, இலக்கியம், கலாசாரம், வாழ்வு, அனைத்தும் தமிழ் மொழியுடன் பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்தவை; தமிழின் உயர்வே தமிழனின் உயர்வுக்கு அடிப்படையாகும். ஆம், தமிழ் வாழ்ந்தாலே தமிழன் வாழ்வான்!

இதனால் தான் பேரறிஞர் அண்ணா அவர்கள், தமிழை தமிழர்கள், ஒருவருடன் ஒருவர் பேசுவதற்காகப் பயன்படுத்தும் ஓர் சாதாரண கருவியாக கருதவில்லை—தங்கள் வாழ்வாக, வாழ்வின் கருப்பொருளாக, வழிகாட்டியாக கருதுகின்றார்கள் என்று குறிப்பிட்டார். அதுமட்டுமன்றி — தமிழர்கள் பொன்னை இழப்பார்கள், பொருளை இழப்பார்கள், நாட்டைக் கூட இழக்க ஒருப்படுவார்கள் — ஆனால் எந்த ஒரு கட்டத்திலும் மொழியை இழக்க ஒருப்பட மாட்டார்கள் என்றும் அண்ணா அவர்கள் அடித்துக் கூறினார்.

தமிழன் தமிழ் மொழிமீது கொண்டிருக்கும் ஆழமான பக்தியைப்பற்றி தமிழாராய்ச்சி மாநாட்டின் போது இங்கு வருகைதந்திருந்த புது டெல்லியைச் சேர்ந்த இந்திப் பேராசிரியரான டாக்டர் ரவீந்திரகுமார் சேத் மிகவும் உணர்ச்சிபொங்க என்னிடம் பின்வருமாறு கூறினர்.

''உலகிலே தமிழனைப்போல தன் தாய்மொழி மீது பக்தியும் அன்பும் கொண்ட வேறு இனத்தவனைக் காண்பது அரிது. தன்னுடைய மொழிக்காக, தனக்குத் தானே தீ மூட்டி தன்னையே அர்ப்பணிக்கவும் தயங்காதவன் தமிழன். தன் உயிரையே தமிழுக்காக அர்ப்பணிக்கக்கூடியவன் உலகில் தமிழன் மட்டுமே!

மேற்கண்டவாறு டாக்டர் ரவீந்திரகுமார் கூறிய போது, இந்தியத் தமிழகத்தில் இந்தி ஆதிக்கத்துக்கு எதிராக தமக்குத்தாமே தீமூட்டி எரித்து, தமிழை வாழ வைத்த வீரத்தமிழன் சின்னச்சாமி, சிவலிங்கம் போன்றவர்களின் தியாகம் அவரது நெஞ்சத்தில் நிழலாடியிருக்கும்! ஆனால் என் நெஞ்சிலோ, வெளிநாட்டார்—வேற்றுமொழியாளர் ஒருவர் — தமிழினத்தைப் பற்றி இவ்வளவு உயர்வாக கருதிக்கொண்டிருக்கும் போது—இங்கு நம் ஈழத்தில் தமிழுக்கு எதிராக தமிழராகப் பிறந்துவிட்ட சில ஈனப்பிறவிகள் இழைத்து வரும் பச்சைத் துரோகம் தான் பளிச்சிட்டது!

அரசியல் ரீதியில் — தமிழ் மக்களுக்குள் கருத்துவேறுபாடுகள்—கொள்கை வேறுபாடுகள்—இருப்பதைக் கூட (அவை தமிழ் சமுதாயத்துக்கு தீமை விளைவிப்பவை என்றாலும் கூட) ஓரளவு மறக்கலாம் — மன்னிக்கலாம்.

படுத்தி விட்ட வரலாறு காணாத மாநாடாகும்! இந்த மாநாட்டுக்கு எதிராக திரைமறைவிலும் — நேரடியாகவும், சதிகள் — சூழ்ச்சிகள், கழுத்தறுப்புக்கள் செய்தவர்கள் அனைவரும் தமிழ் சமுதாயத்தின் பச்சைத் துரோகிகளே!

சிங்கள அரசாங்கமும், சிங்கள அரசாங்கம் வீச



திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன்

கின்ற எச்சில் இலைகளையும் எலும்புத்துண்டுகளையும் நக்கிப் பிழைக்கும் ஈனத்தமிழர்களும் தமிழை எழுதி, தமிழர் மத்தியில் தங்கள் ஏடுகளை விற்று—வயிறு கழுவிவரும் சிங்கள முதலாளிகளின் தமிழ் நாளேடுகளும் தமிழ்

## கோவை-மகேசன்

மாநாட்டுக்கு எதிராக செய்த சதிகளும், கொட்டிய நஞ்சும் தமிழர் சமூதாயம் என்றுமே மறக்க முடியாதவை; மறக்கக்கூடாதவை!

ஆம்—தமிழ் மாநாட்டுக்கு எதிராக தடைகளையும் முட்டுக்கட்டைகளையும் இட்டவர்களை மூன்று பிரிவினராக பிரிக்கலாம் (1) தமிழா

மாநாட்டை கொழும்பில் நடத்தவேண்டும் என்பதே சிங்கள அரசின் விருப்பம் என்பதை அந்தரங்கமாகப் புரிந்து கொண்ட இலங்கைக் கிளையிலுள்ள 'ஆமாம் சாமி' தமிழர்கள் சிலர், மாநாட்டை யாழ்ப்பாணத்திலேயே நடத்துவது என்ற பொதுச் சபையின் தீர்மானத்தை புதைகுழிக்கு அனுப்பிவிட்டு — கொழும்பில் நடத்துவதற்கு சதி முயற்சிகள் மேற்கொள்ளத்தொடங்கிய போதுதான் இலங்கைக் கிளைக்குள் கருத்துவேறுபாடுகளும் மோதல்களும் ஏற்படத் தொடங்கின.

அரசாங்கத்தின் விருப்பத்துக்குகமைய தாளம்போட்டு —தங்கள் சொந்த லாபங்களையும் சுயநலத்தையும் பாதுகாத்து வரும் கொழும்பு வாசிகளான 'தெமிழ'ர்கள் சிலர் (இவர்களே முன்பு 'டமிலர்'களாக இருந்தவர்கள்) உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்ற இலங்கைக் கிளைக்குள் எப்படியோ புகுந்து கொண்டு — பொதுச் சபையின் தீர்மானத்தையே மாற்றி — மாநாட்டை கொழும்பில் நடத்துவதன் மூலம், சிங்கள அரசுக்கும் பந்தம் பிடித்து, தங்களையும் 'பிரமுகர்கள்' ஆக்கிக்கொள்ளப்படாதபாடு பட்டு வந்தனர்.

இத்தகைய சதி நோக்குடன் மாநாட்டுக்கான ஒழுங்குகளை கவனிக்கவேண்டியவர்கள் அது சம்பந்தமான ஏற்பாடுகள் எதையும் கவனிக்காது, புறக்கணித்து இழுத்தடித்து 1973 அக்டோபர் வரை காலம் கடத்திய படியே வந்தனர்.

மாநாட்டுக்கான நிதி சேகரிக்கும் பணியில் சடுபட்ட

## (11) பத்தாவது ஆண்டில் ஏற்பட்ட தத்துக்கள் (i) 'உட்பகை'

ஆனால் நம் இனத்தின் உயிருக்கு உயிரான — நம் வாழ்வின் ஒளிவிளக்கான — ஜீவ சக்தியான - தமிழ்மொழிக்கு ஊறு செய்பவர்கள், யாராயிருந்தாலும் அவர்கள் தமிழ் சமுதாயத்தின் கோடரிக் காம்புகளே. தமிழ்மொழிக்கு பெருமையும் உயர்வும் கிடைப்பதை சகிக்க முடியாத மாற்றாருடன் கை



'தமிழ் ஏந்தல்' ஈழ வேந்தன்.

கோத்து நின்று — தமிழ்த் தாயின் முதுகில் குத்தியவர்களை தமிழ் சமுதாயத்தினால் இன்னும் எத்தனை தலைமுறை சென்றாலும் மன்னிக்கவே முடியாது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது அனைத்துலக தமிழ் மாநாடு—தமிழ் மொழிக்கு உலகளாவிய பெருமையினையும் புகழையும் சேர்த்ததுடன், தமிழ் இனத்துக்கு எழுச்சியையும் ஏற்

ராய்ச்சிமன்ற இலங்கைக் கிளையினுள் இடம் பிடித்திருக்கும் சிங்கள அரசுக்கு நல்ல பிள்ளையாக இருக்க விரும்புகின்ற ஒரு சில ஈனத் தமிழர்கள் (2) சிங்கள அரசும், அதற்கு அடிமைச் சேவகம் செய்துவரும் 'ஆமாம் சாமி' தமிழர்களும் (3) சிங்கள அரசின் ஊதுகுழல்களாகவும், அரசுக்கு நல்ல பிள்ளையாகவும் இருக்க விரும்பும் ஈழத்து நாளேடுகள்!

1970ம் ஆண்டு பாரிசில் நடைபெற்ற மூன்றுவது உலகத்தமிழ் மாநாட்டின் போது — நான்காவது மாநாட்டை ஈழத்தில் நடத்தவேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிந்தவர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்களே; அது அங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு — கலாநிதி வித்தியானந்தனும் மற்றும் பிரதிநிதிகளும் ஈழம் திரும்பிய பின்னர் நான்காவது மாநாடு பற்றி ஆலோசிக்க இலங்கைக் கிளையின் பொதுச்சபைக் கூட்டம் கூட்டப்பெற்ற போது — மாநாடு இலங்கையில் தமிழர் தலை நகராக விளங்கும் யாழ்ப்பாணத்திலேயே நடைபெற வேண்டும் என்பது அக்கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஆனால்—நாட்கள் செல்லச் செல்ல — நான்காவது

வைத்தியர் ஒருவர் — நிதித்துறைக்குக் கிஞ்சிற்றும் சம்பந்தமில்லாத "கல்வி ஆய்வு" சம்பந்தமாக "சர்வாதிகாரத் தொனியில்" அறிக்கை விடுத்து, இலங்கைக் கிளைமீது தமிழ் மக்கள் வெறுப்படையும்படியான ஒரு சூழ் நிலையைத் தோற்றுவித்தார்.



இணைப் பொருளாளருள் ஒருவராகப் பணி புரிந்த சட்டத்தரணி திரு. நமசிவாயம்,

தமது 'புருடா' பலிக்காது என்பதை உணர்ந்து இலங்கைக் கிளையிலிருந்து ஒதுங்கிக்கொண்ட இந்நபர் ஏட்டிக்குபோட்டியாக 'முத்தமிழ் மன்றம்' என்ற பெயரில் ஓர் காளான் மன்றத்தை தொடங்கி தாமே அதற்கு தலைவராகி சுயதிருப்தியடைந்துகொண்டார்.

கொழும்பில் மாநாடு நடத்தி— கோலேந்திகளுக்கு

மேடையமைத்துக் கொடுக்க முனைன்று—அதில் தோல்வியுற்ற இவர் மாநாட்டுக்காக திரட்டப்பட்ட நிதிசேகரிப் பட்டியலையே கையளிக்க மறுத்து துரோகம் புரிந்தார்.

கொழும்பில் மாநாட்டை நடத்தி — அமைச்சர்களிடம் நல்லபிள்ளைப் பட்டம் பெற கடைசிவரை முயன்று மூக்கறுபட்ட மற்றோர் 'கலாநிதி' தாமாகவே பதவியை விட்டு ஒதுங்கினர்!

இவர் மாநாட்டுக்காக தாம் கொடுத்த ஆயிரம் ருபாவை திருப்பித் தரும்படி கேட்டதாக ஏடுகளில் செய்திகள் வந்தன. பெரிய மனிதர்கள் என்று பெயரெடுத்தவர்களிடமும் சிறுமைக் குணங்களும் தாராளமாக நிறைந்து இருக்கும் என்பதை இது எடுத்துக் காட்டிற்று.

இப்படிப் பலதரப்பட்ட தொடர்பான துரோகங்களின் விளைவாக 1972ம் ஆண்டு சனவரியில் நடைபெற்றிருக்கவேண்டிய மாநாடு — 1973 சனவரியிலும் நடைபெறாது — 1973ம் ஆண்டு அக்டோபர்



போக்குவரத்துச் சுற்றுலா பொறுப்பாளராக கடமையாற்றிய திரு. இ. பேரின்பநாயகம்

வரைஸ் தம்பித நிலையிலேயே இருந்து வந்தது.

இந்நிலையிலேதான் உலகத் தமிழாராய்ச்சிமன்ற இலங்கைக் கிளையின் தலைவராகவிருந்த கலாநிதி தம்பையா அவர்கள் பதவியை விட்டு வெளியேறிய நேரத்தில், தமிழுணர்வும் செயற்றிறனும், அஞ்சாமையும் ஆற்றலும் மிக்க ஒருவர் இலங்கைக் கிளையின் புதிய தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டுமென்று பலரும் விரும்பினர். இலங்கைக்கிளை மேல்மட்டப் 'பெரிய' மனிதர்களின் பொழுது போக்கு மன்றமாக இருக்காது உணர்வும் துடிப்பும் மிகுந்த மன்றமாக விளங்கவேண்டுமென்ற ஆவல் பலரிடத்தும் எழுந்தது.

தமிழுணர்ச்சியின்மொத்த வடிவமாக இயங்கும் அன்பர் ஈழவேந்தன் அவர்கள், இந்த எண்ணத்துக்கு செயல்படிவம் தந்தார். ஆம், தமிழுணர்வும் ஆற்றலும், துணிவும் நிரம்பப்பெற்ற பேராசிரியர் கலாநிதி வித்தியானந்தன் அவர்களை இலங்கைக் கிளையின் புதிய தலைவர் பதவிக்கு முன் மொழிந்தவரே அன்பர் ஈழவேந்தன் அவர்கள்தான்!

''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து— அதனை அவன் கண்விடல்''- என்ற வள்ளுவன் வாக்கை சிந்தையில் நிறைத்து-பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களையே தனது புதிய தலைவராக இலங்கைக் கிளை ஏற்றுக்கொண்டது. நெஞ்சுறுதியும் நேர்மைத்திறனும் மிக்க கலாநிதி வித்தியானந்தன் அப்பொறுப்பை ஏற்றிருக்காவிட்டால்— திட்டமிட்டபடி யாழ்ப்பாணத்தில் தமிழ் மாநாடு நடைபெற்றேயிருக்காது என்று துணிந்து கூறிவிடலாம்!

1973ம் ஆண்டு அக்டோபர் 5ம் நாளிலிருந்து பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில்புதிய முகாமைக் குழு பொறுப்பேற்று சுறுசுறுப்புடன் இயங்கத்

(5-ம் பக்கம் பார்க்க)

# எண்ணம்

## பல்கலைக்கழக அனுமதி!

1974ம் ஆண்டு பல்கலைக்கழக பொறியியல், விஞ்ஞான, மருத்துவ பீடங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மாணவர்களின் முழுத்தொகையையும், அதில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையையும் கணக்கிட்டுப் பார்க்கும் போது — உயர் கல்வித்துறையில் தமிழ் மாணவர்களுக்கு எதிராக மிகமோசமான முறையில் பாகுபாடும் பாரபட்சமும் தொடர்ந்து காட்டப்பட்டுவருகிறது என்ற தமிழ் மக்களின் உள்ளக் குமுறலை மேலும் ஊர்ஜிதம் செய்வதாகவே அது அமைகிறது.

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் ஐந்து வளாகங்களில் இரண்டு வளாகங்கள் — வித்தியோதயாவும், வித்தியாலங்காராவும் — தனிச்சிங்கள மாணவர்களுக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது; கொழும்பு, பேராதனை கட்டுபெத்தை ஆகிய மூன்று வளாகங்களிலுமே சிங்கள மாணவர்களுடன், தமிழ் மாணவர்களுக்கும் இடமளிக்கப்பட்டு வருகிறது; இந்த மூன்று வளாகங்களிலும், பொறியியல், மருத்துவம், பல்மருத்துவம், பௌதீக விஞ்ஞானம் வேளாண்மை, உயிரியல், கட்டடக்கலை, போன்ற துறைகளுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 1201 மாணவர்களில் 895 பேர் சிங்களவர்களாகவும், ஆக 306 பேரே தமிழர்களாகவும் இருக்கிறார்கள்.

அதிலும் — குறிப்பாக கொழும்பு வளாகத்தில் பௌதீக விஞ்ஞானத்துறைக்கும், உயிரியலுக்கும் ஒரு தமிழ் மாணவன் கூடத்தெரிவு செய்யப்படவில்லையென்பதை நோக்கும் போது — தமிழ் மாணவர்களுக்கு எதிராக எத்தகையதொரு மாபெரும் அநீதி திட்டமிட்டு நடத்தப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது.

1970ம் ஆண்டு — இன்றைய அரசாங்கம் பதவிக்கு வந்த நாளிலிருந்துதான், பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மக்களுக்கு எதிரான பச்சைத்துரோகங்களும் பாரபட்சங்களும் தொடர்ந்தபடியிருக்கின்றன.

முற்றிலும் திறமை அடிப்படையிலேயே பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை தேர்ந்தெடுக்கும் நாகரிகக் கல்வி முறை அழிக்கப்பட்டு — 'புள்ளிகள் தரப்படுத்தல்' எனும் நரசகார அநாகரிகத்திட்டம் புகுத்தப்பட்டது.

பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கு பெறவேண்டிய புள்ளியில் சிங்கள மாணவனுக்கும் தமிழ் மாணவனுக்குமிடையே வேறுபாடு காட்டப்படத்தொடங்கியது. மொழி, இன அடிப்படையில் பாரபட்சங்கள் புகுத்தப்பட்டன.

இதன் பின்னர் இனவிகிதாசார அடிப்படையில் மாணவர்கள் தெரிவு நடைபெறுமென்று கூறப்பட்டது; பின்னர் மாவட்ட அடிப்படையில் மாணவர் தெரிவு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இப்படியே, மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்படும் முறைபற்றி ஒரே குழறுபடியாக இருக்கிறதே தவிர — எந்த அடிப்படையில், மாணவர் தெரிவு நடைபெறுகிறது என்பது இந்நாட்டின் கல்வி நிபுணர்களும், மாணவர்களும் பொது மக்களும் திட்டவட்டமாக இன்று வரை அறிந்துகொள்ள முடியாத மூடுமந்திரமாகவே இருந்து வருகிறது.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. தரப்படுத்தல் — இனப்படுத்தல் — விகிதாசாரம் — மாவட்ட அடிப்படை — இவ்வாறான பல்வேறு தந்திரோபாய முறைகளும் உயர்கல்வி விஷயத்தில் புகுத்தப்பட்டது ஒரேயொரு நோக்கத்துடன் தான்!

அதாவது — திறமை அடிப்படையில் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் முறையைப் பின்பற்றினால் — தமிழ் மாணவர்களே பல்கலைக்கழகத்துக்கு பெருவாரியாகத் தெரிவு செய்யப்பட்டுவிடுகிறார்கள்; ஆகவே இதை தொடர்ந்து அனுமதிக்கக் கூடாது; வேறு ஏதாவது வழியை முறையைப் புகுத்தி இதை முறியடித்திட வேண்டும்; அப்போதுதான் தமிழ் மாணவர்கள் பெருவாரியாகத் தெரிவு செய்யப்படுவதைத் தடுக்க முடியும்; என்கின்ற இனக்குரோதமான சிந்தனையின் பிரதிபலிப்பே பல்கலைக்கழகப் பிரவேச முறையில் புகுத்தப்பட்ட புதிய — ஆனால் இது வரை வெளியிடப்படாத திட்டமாகும்!

பல்கலைக்கழக அனுமதியில் எந்த முறை பின்பற்றப்பட்டிருந்தாலும் — தமிழ் மாணவர்கள் பெருவாரியாகத் தெரிவு செய்யப்படுவது எப்படியாவது தடுக்கப்பட வேண்டும் என்ற சிங்கள இன வெறியரின் கெட்ட நோக்கம் இப்போது நிறைவேறியுள்ளதை இந்த ஆண்டு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை துலாம்பரமாக காட்டுவதாக இருக்கிறது.

திறமையடிப்படையில் தெரிவு நடைபெறும் போது, பொறியியல், மருத்துவம், விஞ்ஞானம் போன்ற துறைகளுக்கு பெருவாரியாகத் தெரிவு செய்யப்பட்ட தமிழ் மாணவர்கள் இன்று பின்னுக்குத்தள்ளப்பட்டதேன்? தமிழ் மாணவர்களைவிட சிங்கள மாணவர்களின் மூளை இந்த அரசாங்கம் வந்து நான்கு ஆண்டுகளுக்கிடையில் அவ்வளவு தூரம் வளர்ச்சியடைந்துவிட்டதா? இதை யாராவது ஏற்க முடியுமா?

உண்மையில் — தமிழ் மாணவனின் மூளைத்திறன் குறையவில்லை; ஆற்றல் மங்கவில்லை; இனக் குரோதம் காரணமாக குறுகிய நோக்கம் கொண்டோரால், அவன் உதைத்துத் தள்ளப்பட்டிருக்கிறான்; புறக்கணிக்கப்பட்டிருக்கிறான் என்பதை பல்கலைக்கழக புகுமுகப்பரீட்சையில் தமிழ் மாணவர்களும் சிங்களவர்களும் பெற்ற தரப்படுத்தப்படாத புள்ளிகள் தனித் தனியே வெளியிடப்படுமானால் உலகம் அறிந்து கொள்ள முடியும்!

விஞ்ஞான பீடங்களுக்கு இன விகிதாசாரப்படி தமிழ் மாணவர்கள் செய்யப்பட்டிருந்தால் கூட — 400 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்!

இவ்வாறு ஒருபுறம் தமிழ் மாணவர்களுக்கு எதிராக ஈனத்தனமான பாரபட்சம் காட்டிக்கொண்டு — மறுபுறம் தேசியமும் சோசலிசமும் பேசி, தமிழ் மக்களை ஏமாற்ற முனைகின்றனர், ஆட்சியாளர்களும், அவர்களுக்கு குற்றேவல்செய்யும் அடிமைத் தமிழர்களும்!

இந்நிலையில் தமிழ் இனத்துக்கு இருப்பது ஒரே வழி தான்! சிங்கள இனத்தைப்போல தமிழினமும் தன்னைத் தானே ஆளும் இனமாக மாறி தனது சொந்தப் பல்கலைக் கழகங்களை நிறுவனால் மட்டுமே தமிழ் மாணவர்களின் உயர் கல்விக்கு வழி பிறக்கும். அந்நாள் காணும் வரை அநீதியை எதிர்த்து தமிழ் சமுதாயம் குரல் கொடுத்துக் கொண்டேயிருக்கட்டும்.

சிங்கள அரசின் அநாகரிக — இனக் குரோத கல்வி முறையைக் கண்டு நாகரிக உலகம் காறியுமிழட்டும்!!

# கொழும்பு பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர்களுக்கு எதிராக நடைபெறும் கழுத்தறுப்பு!

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் கொழும்பு வளாக விஞ்ஞான பீடத் தமிழ் மாணவர்கள், பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதி பற்றி கீழ்க்கண்ட அறிக்கையை சுதந்திரனுக்கு அனுப்பியுள்ளனர்:

''பல்கலைக்கழக அனுமதியிலும் பாரபட்சம் தொடர்கிறது.'' எனத் தலைப்பிடப்பட்டு, 'சுதந்திரனில்' (31—3—1974) வெளிவந்த செய்திக்குத் தகுந்த ஆதாரமளிக்கும் வகையில் பின்வரும் உண்மைகளை தமிழ் மக்கள் முன் சமர்ப்பிக்க நாம் விரும்புகிறோம்.

1974ம் ஆண்டு, பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியல் சுமார் இரு கிழமைகளுக்கு முன்னர் வெளியானது. இப்பட்டியலின்படி, இவ்வாண்டில் கொழும்பு வளாக விஞ்ஞான பீடத்திற்கு (உயிரியல் விஞ்ஞானம், பௌதிக விஞ்ஞானம் ஆகிய இரு பகுதிகளுக்கும்) தமிழ் மாணவர் ஒருவரையும் அனுமதிப்பதில்லை என முடிவாக்கப்பட்டுள்ளது.

இத்தடவை, உயிரியல் விஞ்ஞானத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில், ஆகப் 19 பேரே தமிழ் மாணவ, மாணவியர். இவர்கள், பேராதனை வளாகத்துக்கு, மட்டும் அனுமதிக்கப்படவுள்ளார்கள். பௌதிக விஞ்ஞானத்திற்கு, ஏறக்குறைய 42 பேர் பேராதனை வளாகத்திற்கும், 87 பேர் கட்டுப்பெத்தை வளாகத்திற்கும் அனுமதிக்கப்படவுள்ளனர்.

கொழும்பு வளாகத்திற்குத் தமிழ் மாணவரை அனுமதிக்காததற்கு, அமைச்சு அதிகாரிகளும், பல்கலைக் கழக நிர்வாகத்தில் இருப்பவர்களும் காட்டும் காரணம், இங்கு போதிப்பதற்கு போதிய வசதிகளும், விரிவுரையாளர்களும் இல்லை என்பதாம். ஆனால், இக்காரணம் சரியென ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதா?

இல்லவே இல்லை! கடந்த மூன்று வருடங்களாக, கொழும்பு வளாகத்திலே தமிழ் மொழியில் விஞ்ஞான விரிவுரைகள், இங்குள்ள விரிவுரையாளர்களாலும், உதவி விரிவுரையாளர்களாலும் நடாத்தப்பட்டுவந்துள்ளன. மூன்று வருடங்களாக விரிவுரைகள் நடாத்தப்பட்டு வந்த பின்னர், 'போதிய வசதிகளும் விரிவுரையாளர்களும் இல்லையே' எனக் கூறப்படுவது வியப்புக்கிடமாய் உள்ளது.

வாசகர்கள் தெரிந்து கொள்வதற்காக, கடந்த 3 வருடங்களில், கொழும்பு வளாகத்தின் விஞ்ஞானப் பகுதிக்கு அனுமதிக்கப்பட்ட தமிழ் மாணவர்களின் (அண்ணளவான) எண்ணிக்கைப் பட்டியலைக் கீழே தருகிறோம்.

| ஆண்டு | உயிரியல் விஞ்ஞானம் | பௌதீக் விஞ்ஞானம் |
|---|---|---|
| 1971 | 19 | 49 |
| 1972 | 16 | 43 |
| 1973 | 4 | 38 |

ஒவ்வோர் ஆண்டிலும் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையானது படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இவ்வாண்டில் முற்றிலாக இல்லாமல் செய்யப்பட்டுள்ளது! இதனால், கொழும்பு வளாகமும் (விஞ்ஞான பீடத்தைப் பொறுத்த மட்டில்) வித்தியோதய, வித்தியாலங்கார வளாகங்களைப்போல, தனிச்சிங்கள மாணவர்களுக்கு மட்டும்' எனும் 'லேபல்' ஒட்டப்பட்டுவிட்டது. எனவே, இலங்கைப் பல்கலைக்கழகத்தின், இப்போதிருக்கும் ஐந்து வளாகங்களில், தமிழ் மாணவர்கள் பேராதனை, கட்டுப்பெத்தை வளாகங்கள் இரண்டுக்குமே ஒதுக்கி விடப்பட்டுள்ளனர்.

இங்கு, கவனத்தில் கொள்ளவேண்டிய விடயம் இன்னொன்றும் உண்டு. இந்த ஆண்டிலிருந்தே, பௌதீக விஞ்ஞானக் கல்வியானது கட்டுப்பெத்தை வளாகத்தில் புதிதாகத்தொடங்கப்படவுள்ளது. இங்கேயே 87 தமிழ் மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். இது வரை காலமும், போதிய வசதியுடனும், விரிவுரையாளர்களுடனும் இயங்கிக் கொண்டிருந்த கொழும்பு வளாக பௌதீகவிஞ்ஞானப் பகுதியிலே, 'போதிய வசதிகள் இல்லையெனில்' (அமைச்சு அதிகாரிகளின் காரணப்படி!) இவ்வாண்டு தொடங்கப்படவிருக்கும் கட்டுப்பெத்தை வளாகப் பௌதீக விஞ்ஞானப் பகுதிக்கு எங்கிருந்து வசதிகள் உண்டாகியுள்ளன என்பதுதான் தமிழ் மாணவர்களாகிய எமக்குப் புரியாத புதிராக உள்ளது.

ஆனால், ஒன்றை மட்டும் நாம் நிச்சயம் புரிந்து கொண்டோம். கல்வி அமைச்சின் இத்தகைய பாரபட்ச நடவடிக்கையானது, தமிழ் மாணவர்களின் உயர் கல்வியையும் நம்பிக்கையான எதிர்காலத்தையும் தகர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் இன்னொரு நச்சு வேட்டாகும்.

இது குறித்து, தமிழ் மாணவர்பெற்றோர், தமிழ் அன்பர் அனைவரும் தகுந்த முறையில் தமது எதிர்ப்பைக் காட்டி, அரசின் இத்தகாத செயலை, யாவரும் அறியச்செய்ய வேண்டும் என்பதே, தற்போது கொழும்பு வளாகத்தில் பயிலும் தமிழ் மாணவர்களாகிய எமது அவா!

## கதவடைப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தையும் கீழே பட்டியல் போட்டு காட்டியுள்ளோம். இதிலிருந்து பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்களுக்கு எவ்வளவு தூரம் கழுத்தறுப்பு நடைபெற்றிருக்கிறது என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள முடியும்.

பௌதிக விஞ்ஞான பீடம் புதிதாக தொடங்கப்பட்டுள்ள கட்டுபெத்தை வளாகத்துக்கு மட்டுமே சிங்கள மாணவர்களைவிட தமிழ் மாணவர்கள் அதிகமாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இங்கு இவ்வாண்டே இத்துறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதும், போதிய விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் இங்கு கிடையாதென்பதும், பேராதனை, கொழும்பு வளாகங்களிலுள்ள கல்வித்தரம் இங்கு கிடையாதென்பதும் மாணவர்களின் பொதுவான கருத்தாகும். அதனால் தான் கண்துடைப்புக்காகவும், அதே வேளையில் தமிழ் மாணவர்களின் கல்வித்தரத்தை நாசமாக்கவுமே இங்கு தமிழ் மாணவர்கள் பௌதிக விஞ்ஞானத் துறைக்கு, அதிகமாக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தமிழ் மாணவர்கள் குமுறுகின்றனர்.

நான்கு, பல்கலைக் கழக வளாகங்களுக்கும் பொதுவாக ஆக 19 தமிழ் மாணவர்களே உயிரியல் விஞ்ஞானத் துறைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வித்தியோதய, வித்தியாலங்கார பல்கலைக் கழகங்களின் விஞ்ஞான பீடங்களில் — அவை தோன்றிய காலம் தொட்டே, தமிழ் மாணவர்கள் அனுமதிக்கப்படுவதில்லையென்பதும் இவ்விரு பல்கலைக் கழகங்களும் சிங்கள மாணவர்களுக்காக மட்டுமே இயங்கி வருவதும் தெரிந்ததே.

சிங்கள மாணவர்கள் அனுமதிக்கப்படும் வித்தியோதய, வித்தியாலங்கார பல்கலைக்கழக வளாகங்களின் விஞ்ஞான பீடத்தில் மட்டுமே பிரயோக விஞ்ஞானம் (Applied Science) போதிக்கப்பட்டுவருகிறது. தமிழ் மாணவர் பயிலும் கொழும்பு, பேராதனை வளாகங்களில் அது போதிக்கப்படுவதில்லை. பிரயோக விஞ்ஞானத்தில் பட்டம் பெற்று வெளியேறுபவர்களுக்கு உடனடியாக வேலை வாய்ப்பு கிடைத்து விடுகிறது. தமிழ் மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காமல் செய்வதற்குத்தான் 'பிரயோக விஞ்ஞானம்' பேராதனை, கொழும்பு வளாகங்களில் போதிக்கப்படாமலிருக்கிறதா என்று மாணவர்கள் கொதிப்புடன் கேட்கிறார்கள்.

கொழும்பு, பேராதனை வளாகங்களின் பயிற்சித் துறைகள் மிகவும் உயர் நிலையில் இருப்பதன் காரணமாக, வேலை வாய்ப்பு கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது என்றும், ஆசிரிய வேலை கூட மறுக்கப் படுவதாகவும் மாணவர்கள் குமுறுகிறார்கள்.

# மலையகத் தமிழனின் பட்டினிச்சாவு உள்நாட்டு விஷயமல்ல!

## சென்னையில் உடுவில் பா. உ.

"இலங்கையில் உள்ள தோட்டத் தொழிலாளர் இலங்கையைவிட்டுவெளியேறும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கப்பட்டு வருகிறார்கள். கடுமையான அந்த நிர்ப்பந்தங்கள் காரணமாக அவர்கள் படும் அவதி



சொல்லில் அடங்காது. தோட்டத் தொழிலாளர் பட்டினியால் நாள்தோறும் செத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இது இலங்கையின் உள்நாட்டு விஷயம் என்று நான் சொல்லமாட்டேன். தோட்டங்களில் பட்டினியால் வாடும் இலங்கைத் தமிழர்களில் 15 ஆண்டு காலத்திற்குள் சிறிமா—லால் பகதூர் சாஸ்திரி—சிறிமா—இந்திரா காந்தி ஒப்பந்த அடிப்படையில் 6 லட்சம்பேர் இந்தியா வர இருப்பவர்கள். இவர்கள் மனிதர்களாக இந்தியா திரும்பினால்தான் நாளை இந்தியாவுக்கு அவர்கள் பயன் படக்கூடும்.

இலங்கையில் தோட்டத் தமிழர்களுக்கு வாரம் ஒன்றுக்கு தனி நபருக்கு அரைப் படி, ஒரு படி என்ற அளவில் தான் ரேஷன் அரிசி தரப்படுகிறது. அந்த அளவிலான ரேஷன் அரிசியை சாப்பிட்டு பட்டினியால் உருவாகியுள்ள அவர்கள், உபயோகம் அற்றவர்களாக இந்தியா திரும்பினல் அது நாளை இந்தியாவுக்கு பிரச்சினையை உண்டாக்கும்.

இலங்கையில் தமிழர்களுக்கு உணவுப்பிரச்சினை மட்டுமல்லாது கல்விப்பிரச்சினையும் உருவாகி உள்ளது. அங்குள்ள தோட்டங்களில் உள்ள தமிழ்ப் பள்ளிகளை மூடி வருகிறார்கள். இதனல் தோட்டங்களில் தமிழ்ப் பிள்ளைகள் சிங்களமே படிக்க வேண்டிய நெருக்கடி உருவாகி இருக்கிறது. சிங்களம் மட்டுமே படித்து ஒப்பந்தப் படி 15 ஆண்டுக் காலத்தில் இந்தத் தமிழர்கள் இந்தியா திரும்பினல் அவர்கள் எவ்வளவு பிரச்சினைக்கு உரியவர்களாக மாறிவிடுவார்கள் என நான் சொல்லத்தேவை இல்லை."

—இவ்வாறு இலண்டனில் நடைபெற்ற சர்வதேச பாராளுமன்ற மாநாட்டில் கலந்துகொண்டு விட்டு இலங்கை திரும்பும் வழியில் சென்னையில் தங்கியுள்ள உடுவில் பா. உ. திரு. வி. தர்மலிங்கம் சென்னைப்பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்தார்.

## தினபதி செய்திக்கு தேவநாயகம் மறுப்பு

தமிழர் கூட்டணியை எதிர்த்து தமிழ்ப்பகுதிகளின் சகல தொகுதிகளிலும் ஐ. தே. கட்சி போட்டியிடும் என்று கல்குடா பா. உ. திரு. தேவநாயகம் மட்டக்களப்பு கோட்டைமுனையில் நடைபெற்ற ஐ. தே. கட்சிக் கூட்டமொன்றில் பேசியதாக 17.4.74 தினபதியில் முதல் பக்கத்தில் வெளிவந்த செய்தி முற்றிலும் பொய்யானது என்று திரு. தேவநாயகம் மறுத்துள்ளார்.

தமிழர் கூட்டணித் தலைவர் தந்தை செல்வாவுக்கு அவர் அனுப்பி அவசரத் தந்தியொன்றிலேயே தினபதி செய்தியை மறுத்துள்ளார். அத்துடன் இது சம்பந்தமாகப் பத்திரிகைகளுக்கு மறுப்பு அறிக்கையொன்றை விடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இதிலும் பாரபட்சமா?

வர்த்தகப்பட்டதாரி ஆசிரியர்கள் நியமனத்திலும் பாரபட்சம்! சிங்களப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான சிங்கள வர்த்தகப்பட்டதாரிகளுக்கு ஆசிரியர் வேலை தரப்பட்டுள்ளது. அவர்கள் சிங்களப் பாடசாலைகளில் பணி புரிகிறார்கள்.

ஆனல் யாழ்மாவட்டத்திலோ ஆக நான்கே நாலு பாடசாலைகளில் மட்டுமே வர்த்தகப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனராம். ஏனைய பாடசாலைகளில் வர்த்தகப்பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை!

ஏன் இந்தப் பாரபட்சம்? இதிலுமா பாரபட்சம்? இது தானு சோசலிசம் என்று கேட்கிறார்கள் யாழ் மாவட்டத்திலுள்ள வேலையற்ற வர்த்தகப்பட்டதாரிகள்!

---

## தமிழ்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ், இந்திப் படங்களை சிங்களத்தில 'டப்' செய்வதற்கு தடை விதித்துவிட்டு சிங்களப்படங்களை மட்டும் தமிழில் 'டப்' செய்ய அனுமதித்திருக்கும் திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பாரபட்சக்கண்ணேட்டம் பற்றி அன்பர் அர்ஜுனு என்ன கூறுவாரோ?

இன்றைக்கு சிங்களத் திரைப்படத்தை தமிழில் 'டப்' செய்து வெளியிடும் திரைப்படக் கூட்டுத்தாபனம் காலகதியில், தமிழில் 'டப்' செய்யாமலே சிங்கள மொழிப்படத்தை அப்படியே திரையிட்டு விட்டு—தமிழ் மக்களே! பொழுது போக்குவதற்கு திரைப்படம் பார்க்க விரும்பினல் சிங்களப்படத்தையே பாருங்கள்! இல்லாவிட்டால் வீட்டில் அடைந்து இருங்கள்!" என்று சொல்லவும் கூடும்!

இப்படியான நிலை தோன்றுவதை அன்பர் அர்ஜுனு விரும்புகிறாரா!

—திரைவாணன்

## தமிழில் மத்திய வங்கி ஆண்டறிக்கையும் செய்தித் திரட்டும்!

இலங்கை மத்திய வங்கியின் 1973ம் ஆண்டுக்குரிய ஆண்டறிக்கை இப்போது தமிழில் வெளிவந்துள்ளது. பொருளியல் மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் மிகுந்த பயனுள்ள இந்த ஆண்டறிக்கையை ரூபா 10/- செலுத்திமத்திய வங்கியில் பெற்றுக்கொள்ளலாம். சொற்ப பிரதிகளே தமிழில் வெளியிடப்பட்டுள்ளதால் தேவைப்படுவோர் உடனடியாக வாங்குமாறு கோரப்படுகின்றனர்.

இதேபோல் - 1974 சனவரி திங்களுக்குரியமாதாந்த செய்தித் திரட்டும் அடமாதத்திய முக்கிய நிகழ்ச்சிகளை உள்ளடக்கி தமிழில் வெளிவந்துள்ளது. தனிப்பிரதி விலை ரூபா 2/- ஆண்டுச் சந்தா ரூபா 20/-இத்தகைய தமிழ் வெளியீடுகளை வாங்கி தமிழுரிமையை கட்டிக்காப்பது தமிழ் மக்கள் கடமையாகும்.

---

**காசி ஆனந்தன்**
**வண்ணை ஆனந்தன்**
**சிறையில் இன்று**
**660-வது நாள்**

---

## யாழில் எழுந்த தமிழோசை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடங்கியது. வண. தனிநாயக அடிகள், ஜேம்ஸ் இரத்தினம் ஆகிய இரு இணைச்செயலாளர்களுடன் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவாவும் புதிய இணைச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். பிரசாரம், செய்தி, பாதுகாப்பு—உபகுழுவின் தலைவராகவும் கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவாவே கடமையாற்றத் தொடங்கினர். கட்டடக்கலைஞர் திரு. வி. எஸ். துரைராசா மாநாட்டு அமைப்புச் செயலாளராகவும், நிதிக்குழுத்தலைவராகவும், கலாசார நிகழ்ச்சிகள், ஊர்வல உபகுழுத் தலைவராகவும் செயற்படத் தொடங்கினர். துணைத்தலைவர்களில் ஒருவராகிய திருமதி புனிதம் திருச்செல்வம் அவர்கள் வரவேற்புக் குழுத்தலைவியாகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

கண்காட்சிக்கு பொறுப்பாக கலாநிதி சி. பதமநாதன் அவர்களும், நினைவு மலர்வெளியீட்டின் பொறுப்பாளர்களாக திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன், கலாநிதி பூலோகசிங்கம் ஆகியோரும், உணவு உறையுள் ஆகியவற்றின் பொறுப்பாளராக திரு. க. சச்சிதானந்தனும், போக்குவரத்துச் சுற்றுலா முதலியவற்றின் பொறுப்பை திரு. இ. பேரின்பநாயகமும் ஏற்றனர். இந்தப் புதிய முகாமைக்குழு தெரிவுசெய்யப்பட்டு, இயங்கத் தொடங்கிய பின்னர்தான் மாநாட்டு ஏற்பாடுகள் சுறுசுறுப்படையத் தொடங்கின; துரிதமாக வேலைகள் நடைபெறவாரம்பித்தன.

மழை விட்டும் தூவானம் மாறவில்லையென்பது போல புதிய முகாமைக் குழுவிலும் அரசாங்கத்துக்கு, வக்காலத்து வாங்கும் 'ஆமாம் சாமி'களும் ஓரிருவர் இடம் பெற்றிருந்ததன்காரணமாக மாநாட்டை கொழும்பில் நடத்துவதற்கு முகாமைக் குழுவை சம்மதிக்கவைக்கும் சதி முயற்சிகள் தொடர்ந்தும் இடம்பெற்றன.

பாதுகாப்பு துணை அமைச்சரிடம் காலையில் நேரடியாகவே சென்று, மாநாட்டைக் கொழும்பில் நடத்தினல் மட்டுமே அரசாங்க ஆதரவு கிடைக்கும் என்ற கூறும் கடிதத்தை அவரிடமிருந்து பெற்றுவந்து, மாலையில் நடந்த முகாமைக் குழுக் கூட்டத்தில் 'ஆமாம் சாமி' ஓரிருவர் சமர்ப்பித்து, முகாமைக் குழுவின் கருத்தை மாற்ற முயன்றிருக்கிறார்.

வாந்திபேதியை காட்டிக் காட்டி, மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தக்கூடாது என்று குழப்பும் முயற்சிகளும் நடந்தன. இதற்காக யாழ்ப்பாணப் பகுதியையே எட்டியும் பார்க்காத டாக்டர் ஒருவரிடமிருந்து முகாமைக் குழுக் கூட்டம் நடைபெறவிருந்த அன்று காலையே அவசர அவசரமாக கடிதம் பெறப்பட்டு மாலைக் கூட்டத்தில் சமர்பிக்கப்பட்டிருக்கிறது.

இலங்கைக்கிளையில் எப்படியோ உறுப்பினராகி அங்கம் வகித்து வரும் ஒரு சில கருத்து 'முடங்களும்' 'சடாமுனி'களுமான ஒரு சில அற்பப் பிறவிகளும் மாநாட்டைக்குழப்பிட உள்ளிருந்தே சதிகள் பல செய்தன. நாளேடுகளில் கற்பனையில் உருவான பொய்ச் செய்திகள் பல வெளிவரக் காரணமாகவும் இருந்தன.

'கருணாநிதிக்கு எப்படி அழைப்பு அனுப்பலாம்! அவர் ஓர் மாநில முதல்வர் தானே! செல்வநாயகத்துக்கு எப்படி அழைப்பு அனுப்பலாம்?' என்பனபோன்ற துரோகத்தனமான கேள்விகளை எழுப்பி உள்ளிருந்தே இவர்கள் 'முடக்கு' வாதம் பேச முற்பட்டனர்.

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்படாது பின்கதவால் அமைச்சரான 'திடீர்' பிறவியொன்றுக்கு மாநாட்டில் மேடையமைத்துக் கொடுக்கப்படாதபாடுபட்டன இந்த அற்பப்பிறவிகள்!

இப்படி உள்ளிருந்தே எழுந்த எத்தனையோ சதிகளையும் சூழ்ச்சிகளையும், கழுத்தறுப்புகளையும் புதிய முகாமைக்குழுவிலுள்ள தமிழ்ப் பற்றுளர்கள் எதிர்த்துப் போராடவேண்டியிருந்தது. திட்டமிட்டபடி யாழ்ப்பாணத்தில்தான் மாநாடு நடத்துவது என்ற நிலையிலிருந்து அவர்களைதிசைதிருப்ப யாராலும் முடியவில்லை. பயமுறுத்தல்களாலோ பாசங்குப் பேச்சுகளாலோ அவர்களைப் பணியவைக்க முடியவில்லை!

புதிய முகாமைக் குழுவிலுள்ள தமிழ்ப் பற்றுளர்கள் இலங்கைக்கிளையின் பொதுச்சபைத் தீர்மானத்தை—அதாவது அரசியல் கலப்பற்று தமிழர் தலைநகரான யாழ்ப்பாணத்திலேயே மாநாட்டை நடத்துவது என்ற அடிப்படை நிலையைக் கட்டிக் காத்திட எவ்வளவு தூரம் உட்பகைவர்களுடன் மோத வேண்டியிருந்தது என்ற உண்மையை ஓரளவு மேலே கோடிட்டுக் காட்டினேன். இனி அவர்கள் சந்திக்க வேண்டியிருந்த புறப்பகை பற்றிக் கூறவிரும்புகிறேன்.

இதற்கிடையில் முகாமைக் குழுவுடன் சம்பந்தப்பட்ட சில குறைகளை இங்கு நான் சுட்டிக்காட்டுவது அவசியமாகும். மாநாட்டுக்கான அழைப்பிதழ்கள் அனுப்புவதிலும் பல 'குழறுபடிகள்' நடந்திருக்கின்றன. பல முக்கியஸ்தர்கள் தங்களுக்கு அழைப்புக்கிடைக்கவில்லையென்று புகார் தெரிவித்துள்ளனர். தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி மாநாட்டுக்குத் தக்கபடி அழைத்திடவில்லையென மனம் வருந்தி உளம் நொந்து கூறியிருக்கிறார். இப்படியான குறைகள் ஏற்படாத வண்ணம் மாநாட்டுக் குழுவினர் தவிர்த்திருக்க வேண்டும். தமிழக முதல்வருக்கும் மற்றும் டாக்டர் மு. வரதராசனர், பன்மொழிப்புலவர் அப்பாதுரை, முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. மற்றும் பொ. சி; போன்ற தமிழகத்தின் முக்கிய பேரறிஞர்களுக்கும் அழைப்பிதழ் போய்ச் சேரக் கூடிய வகையில் அனுப்பப்பட்டிருக்க வேண்டும்.

அடுத்து — உலகத் தமிழ் மாநாடு பற்றி — நாலரைக் கோடி தமிழ் மக்கள் வாழுகின்ற தமிழ் நாட்டிலே கூட போதியளவு பிரசாரம் செய்யப்படவில்லை. தமிழகத்து சாதாரண மக்கள் மட்டுமல்ல — அறிஞர்கள் கூட — நான்காவது உலகத் தமிழ் மாநாடு பற்றி ஏதும் அறிந்திராது இருட்டில் இருந்திருக்கின்றனர். மாநாட்டு இறுதிநாளில் தமிழர்கள் சிலர் உயிரிழக்க நேரிட்ட செய்தியே — மாநாட்டைப் பற்றியும் அங்கு நடந்த ஆய்வுகள் பற்றியும் தெரிந்து கொள்ளும் ஆவலை அவர்களிடம் ஏற்படுத்தியிருக்கிறது! அவர்களை விழிப்படையச் செய்திருக்கிறது.

மூன்றாவதாக — மாநாடு பற்றி முகாமைக்கிளையின் சார்பில் இணைச்செயலாளராக இருந்த டாக்டர் கோபாலபிள்ளை மகாதேவா விடுத்த அறிக்கைகள் யாவும் தனியே ஆங்கிலத்தில் மட்டுமே வெளியிடப்பட்டன. தமிழில் அவை வெளியிடப்படவில்லை. அவற்றைத் தமிழிலும் வெளியிட்டிருக்க வேண்டும் என்று இணைச் செயலாளருக்கு கட்டளையிட்டிருக்க வேண்டியது முகாமைக் குழுவின் கடமையாகும்.

இப்படிச் சில பல தவறுகளை—குறைகளை — மாநாட்டுக் குழுவினர் விட்டிருந்த போதிலும்—ஆட்சியாளரின் சவாலுக்கு அஞ்சாது—தமிழர்களின் தன்மானம் காத்து நின்ற உறுதியும் வைராக்கியமுமே — இக்குறைகளை எல்லாம் நம்மை மறக்கடிக்க வைக்கிறது.

— வளரும்


சிக்கனம்

"இடாம்பீக வாழ்வு - பின்பு இட்டுச் செல்லும் தாழ்வில்தான்."

"சிக்கனமே சிறந்த செல்வம்."

சிக்கனமான சலவைக்கு மில்க் வைட் சலவைப் பவுடரை வாங்கிப் பாவியுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77, யாழ்ப்பாணம்.

# தமிழ்ப்படங்களுக்குத் தடை, கட்டுப்பாடு!

# தமிழர் மத்தியில் சிங்களப்படம் நுழைப்பு!

## 'சிறீலங்கா' வேண்டாம்!

### இலங்கை என்றே கூறுங்கள்!

புது டெல்லியிலுள்ள அனைத்து இந்திய வானொலி நிலைய நெறியாளருக்கு அண்ணு — இராசேந்திரம் எனும் அன்பர் பின்வரும் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்:—

"தங்கள் வானொலியின் தமிழ் ஒலி பரப்பில் எமது நாட்டின் பெயரைத் தவறுதலாக 'சிறிலங்கா' என அழைத்து வருகின்றீர்கள். எமது நாடு, சிலப்பதிகார காலத்திலிருந்து இன்று வரை "இலங்கை" என்றே அழைக்கப்பட்டு வருகின்றதென்பதைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

1: இலங்கையின் புதிய குடியரசு அரசியல் அமைப்பிலும் 'இலங்கை' என்றே அழைக்கப்படுகிறது; இலங்கை அரசும் தமிழில் 'இலங்கை' என்றே அழைக்கிறது எமது நாட்டை;

2: இலங்கையின் குடியரசு முத்திரையிலும் 'இலங்கை' என்றே குறிப்பிடப்பட்டுள்ளதைக் கவனிக்க. (ஏற்ற முத்திரையை ஒட்டியிருக்கின்றேன் இக் கடிதத்தில்). அதுமாத்திரமல்ல, இப்பொழுது தங்கள் கையிலிருக்கின்ற வான் கடித முத்திரையிலும் 'இலங்கை' என்றே குறிக்கப்பட்டுள்ளதைக் கவனிக்கவும்.

3: ஐயம் ஏற்பட்டால், 'இலங்கை அரசியல் அமைப்பு நூல் ஒன்றினையே உவ்விடம் அனுப்பி வைக்கின்றேன்.

4: மேலும், நியூ டெல்கியிலுள்ள இலங்கையின் தூதுவருடன் தொடர்பு கொண்டால் அவரும் எனது கருத்தையே தங்களுக்குக் கூறுவார்.

5: மேலே கூறப்பட்டவற்றைவிட மிகவும் இலகுவான வழி, தங்கள் வானொலியை இலங்கை வானொலித் தமிழ் நிகழ்ச்சிக்கு முடுக்கி விடுதலாகும். தாங்கள் இலங்கை வானொலி நிகழ்ச்சியைக் கேட்பீர்களாயின், அங்கு 'இலங்கை' என்ற சொல், அடிக்கடி ஒலிப்பதைக் கேட்க முடியும்

ஆகவே இனிமேல், டெல்கி ஒலிபரப்பில் மாத்திரமன்றி, தமிழ் நாட்டு நிலையங்களிலும் — சென்னை, திருச்சி முதலியன — எமது நாடு 'இலங்கை' என்றே ஒலிக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்;

மேலும், முக்கியமான செய்திஇன்னுமொன்றுண்டு. அதாவது, நல்ல தமிழ் நிகழ்ச்சிகளைத் தங்கள் வானொலியில் ஒலிபரப்புகின்ற அதே வேளையில், செந்தமிழ்ச் சொற்களான திரு. திருவாட்டி — திருமதி போன்ற சொற்களை வழங்காமல் வடமொழிச் சொற்களான சிறீ, சிறிமதி போன்றவற்றை ஆட்பெயர்முன் இட்டு வழங்குவதேன்?"

## போதனுமொழியுரிமையை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழில் எதுவும் தரமுடியாது; முடியுமானுல் நீதிமன்றத்துக்குப் போங்கள் என்ருர் உள்நாட்டு உள்ளூராட்சி அமைச்சர்!

தமிழர்கள் வந்தேறு குடிகள், அவர்களுக்கு நாம் எதுவும் செய்ய மாட்டோம் என்ருர் முன்னுள் நீதி அமைச்சர்;

சிங்கள மக்களே எம்மை ஆட்சிக்குக் கொண்டு வந்தனர்; அவர்களுக்கு முடிந்த வரை உழைப்போம் என்ருர் பிரதமமந்திரி;

கட்டையாவுக்கும் சின்னை மாவுக்கும் காணி வழங்க முடியாது என்ருர் காணி மந்திரி;

பல்கலைக்கழக அனுமதிப் புள்ளிகளைத் தரப்படுத்தி தமிழ் மாணவர்கள் கல்வியில் மண்ணைப் போட்டார் கல்வி மந்திரி!

இப்படியே இவர்கள் செய்துவரும் கொடுமைகளைத் தொடர்ந்தும் எழுதலாம். இந்நேரத்தில் தமிழ் மக்களின், நிலம், அரசியல், மொழி, கலை, கலாசாரம், மதங்கள், மனித உரிமைகள் சகல தமிழர்களுக்கும் சமமாகக் கிடைக்கப் போராடுவது தமிழரசுக் கட்சியோ; எந்தக் கட்சிகள் ஆட்சி அமைத்தாலும் நியாயம் கேட்டது — கேட்டுவருவது — கேட்கப்போவது தமிழரசுக்கட்சி ஒன்றுதான். இன்று தமிழர் கூட்டணியாக தமிழரசுக்கட்சி வளர்ந்திருக்கிறது. தமிழ் மக்கள், அழிந்த பிறகுதான் தமிழரசுக்கட்சியை அழிக்க முடியுமென்று தபால் அமைச்சருக்கு மீண்டும் ஞாபகப்படுத்துகிறேம்!

### வகுப்பு வெறியர் கட்சிகள்

கே. எம். பி. இராசரெத்தினவின், பிலிப் குணவர்தனவின், சி. பீ. டி. சில்வாவின், கட்சிகளை அழித்து விட்டோமெனப் பெருமைப்படும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அக்கட்சிகளை வளரவிடாமல் தடுத்ததும் வெற்றி கொண்டதும் உண்மையான சம்பவம் தான். ஆனல் அதே நேரத்தில் அக்கட்சிகள் கொண்டிருந்த வகுப்பு வெறியை சிறிலங்கா சுதந்திரக்கட்சி இன்று தன் வசம் வைத்திருக்கிறது. தமிழர்கள் இழந்த உரிமைகள், அவர்கள் அனுபவித்து வந்திருந்த உரிமைகள் இவற்றையே தமிழரசுக்கட்சி கேட்கிறது? இவ்வுரிமைகள் கிடைக்கும் வரை தமிழரசுக் கட்சி வாழ்ந்தே தீரும்! எந்தத் 'தேசியம்' பேசியும் அழிக்கமாட்டார்கள்- அழிக்க முடியாது; தமிழர்களின் இதயதாகம் 'தமிழரசு' ஒன்றுதான்.

## இது சிங்களக் கலாசாரத் திணிப்புஅன்றிவேறென்ன?

இந்நாட்டில் தலை சிறந்த தமிழ் நடிகர்கள் இருக்கிருர்கள்; அவர்களை வைத்து இந்நாட்டிலே தமிழ் பண்பாட்டை எடுத்து விளக்கும் சிறந்த தமிழ் படம் ஒன்றை தயாரித்து தமிழ் புத்தாண்டுக்கு திரைப்படக் கூட்டுத்தாபனம் திரையிட்டிருக்கலாம்; அதற்கு முடியாது போனல் தென்னகத்தில் வெளிவந்த சிறந்த தமிழ்ப் படமொன்றை இங்கு தருவித்து புத்தாண்டுக்கு திரையிட்டிருக்கலாம்; இராசராசசோழன், உலகம் சுற்றிய வாலிபன் போன்ற தரமிக்க நல்ல தமிழ்ப்படங்களைக் கூட தென்னகத்திலிருந்து இங்கு தருவித்து திரையிட மறுப்பதன் மூலம் ஈழத்தமிழர்களின் பொழுது போக்கும் உரிமைக்கும், கலாசார வளர்ச்சிக்கும் திரைப்படக் கூட்டுத்தாபனம் கழுத்தறுப்பு நடத்துகிறது என்பது எவரும் மறுக்க முடியாத உண்மை!

நல்ல தரமான தமிழ்ப் படங்களை — தமிழ்ப்பண்பாட்டினை சித்திரிக்கும் தமிழ்ப்படங்களை — பார்க்கின்ற வாய்ப்பை படிப்படியாக தமிழ் மக்களுக்கு இல்லாமற் செய்துவரும் திரைப்படக் கூட்டுத்தாபனம்—முற்றிலும் சிங்கள நடிக நடிகையரையும், சிங்கள பண்பாட்டையும், பச்சை ஆபாசக் காட்சிகளையும் கொண்ட சிங்கள திரைப்படமொன்றை கேவலமான கொச்சைத் தமிழில் 'டப்' செய்து தமிழ் மக்கள் பார்ப்பதற்காக புத்தாண்டை யொட்டித் திரையிட்ட நிகழ்ச்சி, திட்டமிட்ட கலாசாரத் திணிப்பே தவிர வேறு எதுவுமல்ல!

தென்னகத்திலிருந்து தமிழ்ப்படங்களை இறக்குமதி செய்வதை கட்டுப்படுத்தியும், ஈழத்தில் தமிழ்த் திரைப்பட வளர்ச்சிக்கு போதிய உதவியும் ஒத்துழைப்பும் நல்காமலும் இருக்கும் திரைப்படக் கூட்டுத்தாபனம், அதே வேளையில் சிங்களப்படமொன்றை தமிழ்ப்படுத்தி திரையிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கிறதென்ருல்- அதன் உள்ளார்ந்த நோக்கம் கலாசார திணிப்பு அன்றி வேறென்ன?

ஒருகலாசாரத்தையுடைய மக்கள் மீது முற்றிலும்வேறுபட்ட மற்ருெரு கலாசாரத்தை மறைமுகமாகவோ நேரிடையாகவோ திணிப்பது தேசிய ஒற்றுமையை ஒரு போதும் வளர்க்காது; ஒவ்வொரு இனத்தினதும் தனித்தன்மையும் கலாசாரமும் தனித்தனியே பேணப்படும் போது தான் தேசிய ஒற்றுமை உருவாக முடியும்!

திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் இந்தக் கலாசார திணிப்பு முயற்சி பற்றி சென்ற வார சுதந்திரனில் நாம்சுட்டிக்காட்டியவுடன், 'கலியுக காலம்' என்ற சிங்களத் திரைப்படத்தைத் தயாரித்தவரும் அதை தமிழில் 'டப்' செய்தவருமான 'அர்ஜுனு' என்பவர் அவசரமாக பதிலளித்துக் கொண்டு தினகரனிலும், வீரகேசரியிலும் அறிக்கை விடுத்திருக்கிருர். ('அர்ஜுனு' என்ற பெயரே தமிழ் மரபுப்படி அமைந்த பெயர் அல்ல — தமிழ் பெயராக அது இருக்கவேண்டுமானுல் 'அருச்சுனன்' என்றே இருக்க வேண்டும்.

அந்த அறிக்கையை புருனையிலிருந்துவிட்டுவந்த 'அர்ஜுனு' தான் எழுதினுரா — அல்லது கொலன்னுர் பேரவை நடத்தும் பரியாரியார் தான் எழுதிக் கொடுத்தாரா என்பது கேள்விக்குரிய விடயமே!

சுதந்திரனில் நாம் ஆட்சேபித்துள்ள அம்சத்தை விட்டு விட்டு அவர் எங்கோ சென்று எதை எதையோ தனது அறிக்கையில் கூறியிருக்கிருர்.

சிங்களத் திரைப்படத்துக்கும் அதன் வளர்ச்சிக்கும் ஆணிவேராக இருந்தவர்கள் தமிழர்கள் என்கிருர்; அது உண்மையாக இருக்கலாம். அது தொழில் சம்பந்தப்பட்ட விஷயம். நாம் ஆட்சேபனை தெரிவிப்பதோ முற்றிலும் கலாசாரம் சம்பந்தப்பட்ட விஷயம்;

'தொழில்' என்ற ரீதியில் திரு. அர்ஜுனு எத்தனை சிங்களப்படங்களையும் எடுத்து, சிங்கள மக்களிடையே திரையிட்டு பணத்தை சம்பாதிக்கட்டும்; அது நமக்கு மகிழ்ச்சியே. ஆனல் சிங்களப் படமொன்றைதமிழில்'டப்' பண்ணியோ பண்ணுமலோ — தமிழ் மக்களிடையே திணிக்கும் செயலுக்கு அவர் உடந்தையாக ஏன் இருக்க வேண்டும் என்பதே நமது கேள்வி!

தமது சிங்களத் திரைப்படம் தமிழில் 'டப்' செய்யப் பட்டு வெளியிடப்பட்டது என்பதை பத்திரிகை அறிக்கையில் ஒப்புக் கொள்ளும் அன்பர் 'அர்ஜுனு' அந்தப்படத்தைப் பற்றி தமிழ்ப் பத்திரிகைகளில் செய்யும் விளம்பரங்களில் — தமிழ் மக்கள் கண்களில் இருந்து அந்த உண்மையை மறைத்து — 'இலங்கையில் தயாரான தமிழ்ப்படம்' என்று பொய்ப்பிரசாரம் செய்ததேன்? நடிக, நடிகையர்களின் பெயர்களை வெளியிடாததேன்! தமிழ் மக்கள் தமிழ்ப் படுத்தப்பட்ட சிங்களப்படமே அது என்பதை அறிந்து விட்டால்— அதைப் புறக்கணித்து விடுவார்கள் என்ற அச்சம் தவிர வேறென்ன?

சிங்கள இனத்தின் கைகளில் ஆட்சி சிக்கி—சிங்களம் மட்டும் சட்டம் வந்த பின்னர், சிங்கள ஆதிக்கம் தமிழ் மக்கள் மீது நுழைந்து வருகிறது. லக்சல, சல்பில, லங்காசம, சலுசல, ஜாதிகசம்பத, போன்ற நூற்றுக்கணக்கான சிங்களச்சொற்கள் தமிழில் திணிக்கப் பட்டுவருகின்றன. தமிழ் சைவ மக்களுக்கு சலுகைகளும் உதவிகளும் காட்டி அவர்களை பௌத்தர்களாக்கும் முயற்சி நடைபெறுகிறது. தமிழ்க் குழந்தைகளின் போதனுமொழியாக சிங்களம் திணிக்கப்படுகிறது: தமிழ்ப்பகுதியில் அரசமரம் காணப்படும் இடங்களில் எல்லாம் திடீர் திடீரென்று புத்த சிலைகள் தோன்றுகின்றன.

இவ்வாறு, சிங்களமொழி, பௌத்தமத ஆதிக்கம் அரசியல் ரீதியில் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படுவது போலவே—திரைப்படங்களின் மூலம் சிங்களக் கலாசாரம் திணிக்கப்படுவதற்கு திரு. அருச்சுனு போன்றவர்கள் உடந்தையாக இருக்கலாமா?

'நான்கு இலட்சம்' எனும் சிங்களத் திரைப்படம் தமிழ்படுத்தி வெளியிடப்பட்ட போது நாம் அதை ஆட்சேபிக்கவில்லையென்கிருர் அன்பர் அர்ச்சுனு. நாம் எப்பொதுமே கலாசாரத் திணிப்பு முயற்சிகளை எதிர்த்து வந்திருக்கிறேம்;

(5-ம் பக்கம் பார்க்க)

## உன் தலைவிதியோ?

—யுஸ்ரீன் ஜெயம்

கறுத்தநிறக் கொடிகட்டி
கடையடைத்து அந்நியரை
வெறுத்தவிதம் காட்டிய எம்
வீரத் தமிழ் மகனே
பருத்தபடை கொண்டெதிர்த்த
பறங்கியரை விரட்டிய நம்
மறத் தமிழன் சங்கிலியின்
மாண்புமிகு வீரவனே.

வரும்பகைவர் படைகண்டு
மார்தட்டிக் களம் புகுந்த
இரும்பொத்த நெஞ்சினனும்
இலங்கேசன் பரம்பரையே
பெருங்குடியிற் பிறந்தவன் நீ
பேடியல்ல பொங்கியெழு
ஒழுங்கு திரண்டோரணியில்
உரிமைக்காய்ப் போரிடடா!

கூற்றுவரின் இடியுதைகள்
குண்டாந்தடி யடிகள்
மாற்றிடுமோ உன்வழியை
மறைத்திடுமோ தமிழுணர்வை
வேற்றுமொழிக் கஞ்சுவையோ
விழித்தெழு இவ் வேளையிலே
மாற்றுனின் காலிடையே
மடிவதுமுன் தலைவிதியோ

# மலையகத் தமிழ் ஆசிரியர்கள் மத்தியிலே பிளவை ஏற்படுத்தியது இளைஞர் முன்னணி!

## முன்னணியின் சூழ்ச்சியில் விழுந்தோர், வருந்த வேண்டிய நேரம் விரைந்து வரும்!

மலையகத்தில் — மலையக இளைஞர் முன்னணிப் பிரமுகர்கள் இன்று நுவரெலியா மாவட்டத்தில் கூடாரமடித்துள்ளார்கள்? மலையக இளைஞர் முன்னணிப்பொதுச் செயலாளர் இன்று நுவரெலியாக் கல்வித் திணைக்களத்தில் பிரதம கல்விப் பணிப்பாளராக வந்திருக்கிறார்: இவர் கொஞ்சக் காலம் வெளிநாடுபோக அவரிடத்தைப் பிடித்து வைத்திருந்த கிருஷ்ணன் இன்று கற்றனில் கைலன்ஸ் கல்லூரியில் ஆசிரியராக இருக்கின்றார். இங்குதான் இம்முன்னணியின் முக்கிய பிரசாரப் பீரங்கி திருச்செந்தூரன் அதிபராக விளங்குகின்றார். இன்னும் முன்னணி இளைஞர்கள் கைலன்சில் மிக அதிகமாக இருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் இரவோடிரவாக ஒரு கூட்டத்தைக் கூட்டி சமீபத்தில் கற்றன் வட்டாரத்தில் நடைபெற்ற ஆசிரியசங்க ஆட்சிப் பீடத்தை ஆக்கிரமிக்கக் கங்கணம் கட்டினர்.

### திட்டம் தவிடு பொடி

கூட்டத்தன்று அவர்கள் திட்டம் தவிடு பொடியானதும் யாழ்ப்பாணத்து ஆசிரியர்கள் சிலரும் முன்னணிப் பிரமுகர்களும் கூட்டத்தை விட்டுவெளியேறினர். அன்று கூட்டத்தை விட்டு வெளியேறியோர் பத்துப்பேரும் கைலன்ஸ் கல்லூரியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் வெளியேறியதும் இலங்கை ஐக்கிய ஆசிரியர் சங்க

விண்ணப்பப்பத்திரத்தைப் பலரிடம் விநியோகித்ததிலிருந்து அன்று என்ன நோக்கத்துடன் இவர்கள் சில யாழ்ப்பாண ஆசிரியர்களையும் தம்வலையில் சிக்கவைத்து நடந்துகொண்டனரென்பது தெளிவாகின்றது.

மலையக இளைஞர் முன்னணி பிரமுகராக விளங்கும் கிருஷ்ணன் பாடசாலைக்குப் பாடசாலை, தானே சென்று விண்ணப்பபடிவங்கள் கொடுத்து அங்கத்தவர்களாகச் சேரக்கேட்டார். அதன் பின்னர், அவர் வேண்டுகோள்விழலுக்கிறைத்த நீராகியதும், ஒரு புது வழியைக் கண்டு பிடித்தார் அவர். மஸ்கெலியா எம். பி. யிடம் காவடி தூக்கி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி தற்போதிருக்கும் சங்கம் சமஷ்டிக் கட்சி ஆதரவுள்ளது என்றும் இதனைக் குலைத்துக் குடடிச் சுவராக்க வேண்டுமென்றும் நஞ்சூட்டி தன் வஞ்சனைத் திட்டத்தை நிறைவேற்றினார். மஸ்கெலியா எம். பி. யின் பிறுங்கில் ஆசிரியர்களுக்குக் கடிதங்கள் அனுப்பிவைக்கக் கப்பட்டன. அங்குரார்ப் பணக்கூட்டம் நடக்குமென்றும எம். பி. யும் பிரதம பேச்சாளராக இருப்பரென்றும் வேறு கடிதத்தில் குறிப்பிடப்பட்டது.

### மஸ்கெலியா பா. உ. செய்தது என்ன?

மஸ்கெலியா எம். பி. ஆசிரியர் இடமாற்றத்தில் இதுவரை கடைப்பிடித்தகொள்கையை அனுபவத்தில் அறிந்த ஆசிரியர்கள் செய்வதறியாது விழித்தனர். இந்த எம். பி. சில அதிபர்களின் சிபார்சின் பேரில் ஆசிரியர்களை றபர்பந்தாக இங்குமங்கும் மாற்றியது நாடறிந்த விஷயம். இந்த எம். பி. ஆசிரியர்களுக்கும், கல்லூரிகளுக்கும் இதுவரை செய்த நல்ல காரியம் எதுவும் இல்லை: இவர் இடமாற்ற

### அப்பலோ

மொன்றையே தனது எண்ணப்படி நடத்தி முடித்துள்ளார். இன்னும் சில மலையக இளைஞர்களுக்கு ஆசிரியர் வேலைபெற்றுக்கொடுத்துள்ளார். இவர்கள் அனைவரும் எம். பி. யின் கடிதம் கண்டதும் கூட்டத்திற்குச் சென்றனர்.

இதற்குள் பல மொட்டைக் கடிதங்கள் முன்னணியினருக்குக் கிடைத்தன. ஆரம்பத்தில் இச் சூழ்ச்சித் திட்டத்திற்கு யாழ் ஆசிரியர்களைப் பலியாக்க எண்ணிய கிருஷ்ணன் அன்றைய

ஐக்கிய ஆசிரியர் சங்கக் கூட்ட புதிய உத்தியோகத்தர்தெரிவில் தலைவர்— செயலாளர், போன்ற பதவிகளை யாழ் ஆசிரியர்களுக்கு வழங்கினர். இப்பதவி வழங்கப் பட்டவர்கள் துள்ளியமாடுகளாக இப்போது பொதிசுமக்கின்றனர்.

எம். பி. எமது சங்கத்தவர்களுக்கே அதிக சலுகை செய்வார்; எல்லாரும் எமது சங்கத்தில் சேருங்கள் என்ற கோஷம் விஸ்வரூபமெடுத்துள்ளது. எம். பி. அரசாங்க ஆதரவாளர். முன்னணிப் பொதுச்செயலாளர் பிரதம கல்வி அதிகாரி. இவர்கள் ஆட்டம் இப்போதைக்கு வெற்றிபெறலாம்; ஆனால் ஆட்சி மாறியதும் இவர்கள் எந்த மூலையில் முக்காடிட்டு இருக்கப்போகின்றார்களோ? பொறுத்திருந்து பார்ப்போம். தலைநகரில் முகாமிட்டு எம். பி. யின் தம்பிகளாக விளங்குவோர் ஆட்சி மாற்றத்தின் பின் எம். பி. வீட்டில்தான் —அவர் தாழ்வாரத்தில்தான் புகலிடம் தேடவேண்டும்.

எம். பிக்குப் பின்னல்— மாற்றம் வரும் என்று பயந்து வால்பிடிக்கும் ஆசிரியர்கள் இந்த எம். பி. தமிழ் ஆசிரியர் மாணவர் பிரச்சினையில் இடித்த புளியாக இருந்து வருவதை எண்ணிப் பார்க்க வேண்டும். மஸ்கெலிய தேர்தல் தொகுதியிலுள்ள கினிகத்தேனை தமிழ் பிரிவில் எம். பி. யின் ஆதரவாளரான அதிபர் தமிழ் வகுப்புக்களைப் படிப்படியாகக் குறைத்தபோது இதுபற்றி எம். பி. க்குத் தெரிவித்தும் இவர் வாழாவிருந்ததேன்? பல ஆண்டு காலமாக, எட்டு வருடங்களுக்கு மேலாக தமிழ் பிரிவை சிங்களப் பிரிவிலிருந்து பிரித்துத் தனித்தியங்கப் பணமும் எண்ணாயிரம் சேர்த்தும எம். பி. இதற்கு ஆதரவு தராததால் இதுவரை இம்முயற்சி கைகூடாமலிருப்பது முன்னணிப் பிரமுகர் அறிந்ததல்லவா?

### எம். பி. எங்கே?

கற்றன் வட்டாரத்தில் உள்ள ஒரே ஒரு மகளிர் பாடசாலையில் தோட்டப் பாடசாலை மாணவிகளுக்கு 6ம் வகுப்பில் சேரும் உரிமை இவ்வாண்டு பறிக்கப்பட்ட போது பலவித முயற்சிகளும் பயனற்றுப் போகவே இன்று முன்னணிப் பிரமுகர் பாடசாலைக்கு அவர்கள் அனைவரும் அனுப்பப்பட்டபோது எம். பி. எங்கே போனர்? முன்னணி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்ததேன்? எம். பி. யிடம் இதனை எப்படிக் கூறுவதென்று முன்னணிப் பிரமுகர்கள் பின்வாங்கவில்லையா? இதனைக் கைலன்ஸ் யாழ் ஆசிரியர்களும் முன்னணி ஆசிரியர்களும் சிந்தித்துத் தெளிவார்களாக!

### சிங்கள அதிபர்

இவற்றையெல்லாம் விட தமிழ் மகாவித்தியாலயம் என்று பதிவாகியிருக்கும் புனித பொஸ்கோ கல்லூரிக்கு இதுவரை தமிழ் அதிபர் ஒருவரை முன்னணி நியமிக்க நடவடிக்கை எடுக்காததேன்? சிங்கள அதிபர், தமிழ் மகாவித்தியாலயத்திற்கு நியமிக்கப்பட்ட போது இந்த எம். பி. எங்கே ஓடி ஒழித்திருந்தார்? முன்னணிப் பிரமுகர்கள் எங்கே முக்காடிட்டிருந்தனர்? பிரதம கல்வி அதிகாரியும் முன்னணிப்பொதுச்செயலாளரும் ஆகிய இவரிடம் நுவரெலியாக் கல்வித்திணைக்களத்திலிருந்து நீண்ட லீவில் சென்றது தெரியாதா?

இன்று வரை ஒரு தமிழ் அதிபர் நியமிக்க எம். பியால் முடியவில்லை. இன்று அவர் சங்கம் அமைத்து தமிழாசிரியர்களுக்கு பால் வார்க்கப் போகின்றாரா? கூரையில் இருக்கும் சுரைக்காயைப் பதிக்கமாட்டாத குருக்கள் வானம் ஏறி வைகுண்டம் காட்டப் போகின்றேனென்றால் இதனை நம்புபவர் மடையர்களாக வல்லவா இருக்க வேண்டும்.

### ஒற்றுமை உடைந்தது

இதுவரை ஒற்றுமையாக இருந்த கற்றன் வட்டாரத் தமிழாசிரியர்கள் இரு கூறுகப்பிரிக்கப்பட்டனர். இதனை முன்னின்று நடாத்திமுடித்த கிருஷ்ணன் முன்னர் நாவலப்பிட்டியில் தமிழாசிரியரைப் பிரித்து வைத்து அவர் தந்திரம் அங்கு வெற்றி பெறுததால் நாவலப்பிட்டியிருந்து அங்குள்ள அரசியல்வாதியால் துரத்தியடிக்கப் பட்டவர். நாவலப்பிட்டியிலிருந்து கற்றன் வந்து பெட்டிப்பாம்பாக இருந்த கிருஷ்ணன் தன்பழைய சாக்கடை மணத்தை மூடிமறைத்து வாழ்ந்து—பழையதை மறந்திருப்பார்கள் என்று எண்ணி மீண்டும் தன் பிறவிக்குணத்தைக் காட்டுகின்றார். இவரதும் எம். பி. யினதும் சூழ்ச்சித்திட்டத்தில் இன்று பலியாகும் ஆசிரியர்கள் தமது தவறை எண்ணி எண்ணி வருந்தும் காலம் விரைவில் வரும்போது நாமும் அதனைப்பார்த்துக் கழிவிரக்கப் படுவோம். கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்; காலம் மாறும்!

## கூட்டுறவாளர் அடைந்தனர் வெற்றி! குமாரசூரியர் முகத்தில் கரிப்பூச்சு!

இற்றைக்குச் சில ஆண்டுகளின் முன் ஏழாலைக் கிராமத்தில் நிறுவப்பெற்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஓர் பகுதியாக ஓர் கிராமிய வங்கி உருவாக்கப்படல் வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அதன் பிற்பாடு தற்போதைய உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சரின் திட்டத்தின்படி, சுன்னாகத்தில் ஓர் மொத்த விற்பனவுச் சங்கமும், உடுவில், இணுவில், புன்னாலைக்கட்டுவன், ஏழாலை ஆதியாம் இடங்களில் அதன் கிளைகளும் உருவாக்கப்பட்டன. இதன் பெறுபேறாக, சனநாயக முறையில் முன் அமைக்கப்பட்ட ஐக்கிய பண்டகசாலைகள் யாவும்சுன்னாகத்தில் அமைக்கப்பட்ட மொத்த விற்பனை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளாகப் பதிவு செய்யப்பட்டன.

இச் சங்கத்தை இயக்குபவர்களில் கூடினபகுதியோர் அமைச்சரினால் தெரிவு செய்யப்பட்டவர்களாயும், தலைவர் பதவியை வகிப்பவர் அமைச்சரினால் அனுமதிக்கப்பட்டவராயும் இருக்கவேண்டுமெனப் பிரமாணங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன் பெறுவேறாக, அமைச்சரால் அங்கிகரிக்கப்பட்ட ஒருவரே இதுகாறுந் தலைவராக இருந்துவந்தார்; ஆயினுஞ் சாத்திரப் பிரகாரமாக இத் தலைவர் தம்முடைய பதவியை விட்டு விலகியவுடன், சனநாயக ரீதியில் இன்னொருவர் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருடைய தலைமையின் கீழ்க்கூடிய நிர்வாக சபையினர், முன் திட்டம் வகுத்தபடி, ஏழாலையில் கிராமியவங்கியை அமைக்கத் தீர்மானித்தனர்.

அதே நிர்வாக சபையினர் இவ்வங்கியைக் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திறக்கவேண்டுமென விரும்பினர். இவ்விருப்பத்தின்படி கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளரை சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 15ம் கிளையில் கிராமிய வங்கியைத் திறக்கவேண்டுமென விரும்பிக் கேட்டனர். அயினும் அவர் யாழ்ப்பாணப் பகுதி அரசாங்க அதிபரைக் கொண்டு வங்கியைத் திறப்பித்தல் நல்லதென ஆலோசனை கூறி, அரசாங்க அதிபரின் விருப்பத்துக்கிசைய 25—3—74 இல், இக்கிராமிய வங்கியைத் திறக்க ஏற்பாடுகள் செய்தனர். அதன் பிரகாரம் வங்கித் திறப்பு விழாவுக்கு வேண்டிய எல்லா ஆயத்தங்களுஞ் செய்யப்பட்டன.

இத் தருணத்தில் அமைச்சர் செல்லையா குமாரசூரியர், இத்திறப்பு விழா இரண்டு மாதங்களுக்குப் பின் போடப்படல்வேண்டுமென்று கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளருக்குக் கட்டளை விதித்ததுமல்லாமல் உடனடியாகத் தற்போது தலைவராயிருப்பவரிடம்போய், தம்முடைய சட்டளையை நிறைவேற்றும்படி கேட்டுக்கொண்டார். கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் அமைச்சர் குமாரசூரியரின் கட்டளைப்படி தற்போதைய தலைவரின் வீட்டுக்குச் சென்று திறப்பு விழாவை இரண்டு மாதம் பின்போடும்படி வருந்திக் கேட்டனர். ஆயினுந் தலைவரோ அதற்கு இணங்கவில்லை.

கூட்டம்தொடங்குவதற்குச் சில மணித்தியாலங்களின் முன் சுன்னாகம் பொலிசார் சங்கத் தலைவரிடஞ் சென்று, அரசாங்க அதிபர் சில காரணங்களை முன்னிட்டு, இக்கிராமிய வங்கியைத்திறக்க வரமாட்டாரென அறிவித்தனர். அத்தருணம் திரளான மக்கள் வங்கித் திறப்பு விழாவுக்கு வந்து குவிந்தனர். நடந்த சம்பவங்களைக் கேட்டவர்கள் வங்கி எப்படியுந்திறக்கப்படல் வேண்டுமென்று ஒரே மனதாய்த் தீர்மானித்தனர்; ஆகவே குறிக்கப்பட்ட கிராமிய வங்கி சங்கத் தலைவரால் திறந்து வைக்கப் பட்டது.

அமைச்சர் குமாரசூரியரின் இவ்விதமான விநோத விளையாட்டுகளுக்கு என்ன காரணமென அனேகர் நூதனப்பட்டனர். அனேகருடைய உள்ளத்தில் உதித்தது என்னவானுல், இக்கிராமிய வங்கியை அமைச்சர் குமாரசூரியர் அல்லது அவர் விரும்பிய ஒருவர் திறப்பதற்காவே இரண்டு மாதகாலத்துக்கு திறப்பு விழாவை ஒத்திபோட முயற்சி நடந்தது என்பதே.

அமைச்சர் அவர்களே! உங்களுக்குப் புகழ் மாலை வேண்டுமானுல் இவ்வளவுக்குக் கீழே இறங்கலாமா?

—வீ. ஆர். முருகேசு.

## "எட்டப்பர் வாழும்வரை"

—எஸ். பி. கே.

வெற்பெடுத்த தோள் படைத்த
வீரத் திராவிடனை—இராவணனை—
வெஞ்சமரில் வீழ்த்திட...
இராமனுடன் சேர்ந்து
சூழ்ச்சி செய்த
விடணனின் சந்ததியார்
சாகவில்லை—
வாழ்கின்றார் இன்றும் —
எனின் ...
ஈழத் தமிழினமே
வெற்றியுனக்கெப்போது...?

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.


இப்பொழுது காட்சி தருகிறார்கள்!

சென்ரல் -(மருதானை) 2,6,9 30

சனி, ஞாயிறு காலை 10 மணிக்கும்

ஜெய்சங்கர், நிர்மலா

ஏ. வி. எம். ராஜன், தேவிகா

நடித்த

அன்புச் சகோதரர்கள்


## வாழ்த்து!

—நீலாவணைத் தேவராஜ்

அண்ணர் காசி ஆனந்தன்
அவர்கட் கெனது வணக்கங்கள்
அண்ணா அறிஞன்; அவருடைய
ஆசைத் தம்பி நீ கவிஞன்!
எண்ண இனிக்கும் நெஞ் செல்லாம்!
எருமை ஆட்சி புரிகையிலே...
வண்ண மலர்கள் மிதிபட்டு...
வாடிக் கசங்கும்! வதைந்திடும்!


உன்னைச் சிறையில் அடைத்தாலும்
உதையும் அடியும் கிடைத்தாலும்
அன்னைத் தமிழை அரியணையில்
அமர்த்தத் துடிக்கும்... உன் உணர்ச்சி
தன்னை அடக்க முடியாது!
தவறும் சரியும் சொல்கின்றார்
சின்ன மனிதர் ஸ்ரீமாவோ
சீர்பாதத்தை தொழுகின்றார்!

அண்ணே உன்போல் ஈழத்தில்
ஆர் ஓர் தமிழன் வாழ்கின்றான்!
கண்ணே போல உனை ஈன்ற
அன்னை யவளே வீரத்தாய்!
மண்ணைக் காக்கும் உன் பாதை
மடுவும் மேடும் மலிந்தாலும்
உண்மை வெல்லும் ஒருநாளில்!
உனக்கெம் பிறந்த தின வாழ்த்து.


5-வது வாரம் கிங்ஸ்லி-பிளாசா லிடோ (யாழ் நகர்)

முத்துராமன், ஜெயலலிதா, சுந்தரராஜன்,
சாவித்திரி, சோ, மனோரமா, சசிகுமார்,
ஸ்ரீலேகா, M. R. R. வாசு, நடித்தது.

சூரியகாந்தி



விரைவில் எதிர்பாருங்கள் எம். ஜி. ஆர்., ஜெயலலிதா நடித்த ராமன் தேடிய சீதை (ஈஸ்ட்மன் கலர்)

7-வது வாரம்
கெயிட்டி
ஜக்கம்மா

தமிழில் வெளிவரும்
முதல் கௌபோய்
திரை விருந்து



ஜெய்சங்கர் - சாவித்திரி
உஷா S. V. சுப்பையா
தேங்காய் சீனிவாசன்
மனோரமா

செல்லமகால் மற்றும் திரைகளில்

அர்ஜுனாவின்

கலியுக காலம்

வெகு விரைவில்

எம். ஜி. ஆர்., ஜெயலலிதா

— நடித்த —

அன்னமிட்ட கை


இப்பத்திரிகை சுனோ நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974ம் வருடம் ஏப்ரல் மாதம் 21-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.